# மாணவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவடைந்துள்ள அரச பாடசாலைகளின் செயலாற்றல்



அறிக்கையின் இலக்கம் - பீஈஆர்/ஏ/எஸ்எச்/2018/01

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

**செயலாற்றல் கணக்காய்வு பிரிவு**

## உள்ளடக்கம்


| இலக்கம் | | விபரம் | பக்க இலக்கம் |
| --- | --- | --- | --- |
| 1. | | நிறைவேற்றுப் பொழிப்பு | 3 |
| 2. | | அறிமுகம் | 4 |
| | 2.1 | பின்புலம் | 4 |
| | 2.2 | இலங்கையில் அரச பாடசாலைகளின் அடிப்படை விபரங்கள் | 6 |
| | 2.3 | கணக்காய்விற்கான அதிகாரம் | 9 |
| | 2.4 | கணக்காய்விற்கான தலைப்பினை தெரிவு செய்தமைக்கான காரணம் | 10 |
| | 2.5 | கணக்காய்வு விடயப் பரப்பு | 10 |
| | 2.6 | கணக்காய்வு நுழைவு | 11 |
| | 2.7 | கணக்காய்வின் நோக்கம் மற்றும் மூலப்பிரமாணங்கள் | 11 |
| 3. | | கணக்காய்வு அதவானிப்புக்களை விரிவாகக் கலந்துரையாடல் | 12 |
| | 3.1 | புதிதாகப் பாடசாலைகளை அமைத்தல் | 12 |
| | 3.2 | பாடசாலைகளை மூடுதல் | 22 |
| | 3.3 | மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைந்த பாடசாலைகளின் செயலாற்றல் | 24 |
| | 3.4 | முதலாந் தரத்திற்கு மாணவர்களை அனுமதித்தல் | 36 |
| | 3.5 | பாடசாலைகைள உயர்த்துவதற்காக நடைமுறைப்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் | 39 |
| 4. | | பரிந்துரைகள் | 49 |

**நிறைவேற்றுப் பொழிப்பு**

ஆரம்பக் காலத்தில் காணப்பட்ட பௌத்த அறப்பணி கல்விமுறை ஆங்கிலேயரினர் மிஷனரி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆங்கில மிஷனரி பாடசாலைகளுக்கு மேலதிகமாக சிங்கள பௌத்த பாடசாலைகளும் அதன் பின் முஸ்லிம் மற்றும் இந்து பாடசாலைகளும் உருவாகின. தற்காலத்தில் தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகள் என நிர்வாக முறையில் பிரிந்து வேறுபடுத்தப்பட்டுள்ளதுடன் இதற்கு மேலதிகமாக தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளும் இந்த அமைப்பிற்குள் சேர்ந்துள்ளன. இலங்கையில் பெற்றோரின் அடிப்படை அபிலாஷை தமது பிள்ளைகளுக்கு சிறந்த பாடசாலையொன்றைப் பெற்றுக் கொள்வதாகும்.

நாட்டின் சனத்தொகை அடர்த்திக்கேற்ப பாடசாலைகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் பாடசாலைகளின் பிரசித்திற்கேற்ப அப்பிரதேசத்திற்கு வெளிப் பிரதேசங்களிலிருந்தும் மாணவர்கள் வருவதன் காரணமாக நாட்டில் பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையிலான சீரற்றத்தன்மை பரம்பலடைந்துள்ளது. மேலும், மொத்த பாடசாலை எண்ணிக்கையான 10,194 இல் 5,161 பாடசாலைகள் அதாவது சரிபாதி 200 மாணவர்களிலும் குறைந்த பாடசாலையாக உள்ளமை இத்துறையினுள் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டிய காரணியாக உள்ளது. மாணவர் எண்ணிக்கை குறைவான பாடசாலைகள் உருவாகுவதற்கான காரணங்களில் தமது பிள்ளைகளைச் சிறிய பாடசாலைகளுக்கு அனுப்புவதற்குப் பெற்றோர் விரும்பாமை, ஆசிரியர்கள் அப்பாடசாலைகளில் கற்பிப்பதற்கு அதிக ஆர்வம் காட்டாமை, அச்சூழலில் குறிப்பிட்ட பாடசாலையை விட முன்னேறிய பாடசாலை உள்ளமை, தனித்த கிராமங்கள் உள்ளமை போன்ற பல்வேறு காரணங்களை அறியக்கூடியதாக உள்ளது அவ்வாறே கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மூலப்பிரமாணங்களுக்கு முரணாக புதிய பாடசாலைகளை ஆரம்பிப்பதனால் அந்தப் பாடசாலைகளைச் சூழவுள்ள ஏனைய பாடசாலைகள் மூடப்படுவதற்குக் காரணமாதல், பாடசாலையை மூடுவதற்கான மூலப் பிரமாணங்கள் காணப்பட்ட போதிலும், பாடசாலைகளை மூடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது அப்பாடசாலைகளை மூடும் நிலைமைக்கு அதிக செயற்பட்டு அப்பாடசாலைகள் மூடப்படுவதைத் நிறுத்துவதற்கு அதிக பிரயத்தனம் எடுப்பதற்கு அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்பட்டுள்ளமை அப்பாடசாலைகளின் பரீட்சை பெறுபேறுகளின் முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாமை, அதிக பரப்பிலான இடம் மற்றும் கட்டடங்கள் உள்ளிட்ட ஏனைய பௌதீக வளங்களின் குறை பயன்பாடு உள்ளமை, சில பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் உள்ளமை, நவீன பௌதீக வளங்கள் இல்லாமை அவ்வாறான பாடசாலைகளை நடாத்துவதற்கு அரசிற்கு அதிக செலவு ஏற்படல் போன்ற சிக்கல்கள் இங்கு அவதானிக்கப்பட்டன.

இந்தச் சிக்கல்களைக் குறைப்பதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு செயற்திட்டங்களினூடாகப் பல்வேறு பௌதீக வளங்களின் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட போதிலும் தற்காலத்தில் ''அண்மிய பாடசாலை சிறந்த பாடசாலை'' செயற்திட்டம் அந்த நோக்கத்திற்காக செயற்படுத்தப்பட்ட விசேட செயற்திட்டமாகும். மாணவர் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைந்த பாடசாலை உருவாகுவதற்கான காரணம் மற்றும் அவற்றை முன்னேற்றுவது தொடர்பில் செல்வாக்கு செலுத்தும் காரணங்கள் எவை என ஆராய்ந்து அவ்வசதியைத் தயாரித்தல் பிரதான நோக்கமாகும். இப்பாடசாலைகளை முன்னேற்றி பாடசாலைகளுக்கிடையில் நிலவும் வேறுபாடுகளைக் குறைத்து பெற்றோருக்குத் தமது எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வகையில் சிறந்த பாடசாலைக்கு தமது பிள்ளைகளை அனுமதித்துக் கொள்ளும் வாய்ப்பு தொடர்பாகவும் அப்பாடசாலைகள் மூலம் பெற்றுக் கொடுக்கும் கல்வியின் தரத்தினை உயர்த்துதல் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்படும்.

பாடசாலை கட்டமைப்பு தொடர்பான அறிவுரைகள், கல்வியியலாளர்களின் மேற்பார்வையின் கீழ் கால ரீதியில் திருத்தியமைத்தல், மாணவர்களை பாடசலையில் சேர்க்கும் போது பெற்றோரின் பாடசாலை தொடர்பில் நிலவும் எண்ணங்கள் மாற்றமடையும் வகையில் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல், பாடசாலைகளை ஆரம்பித்தல், முடிவிடுதல், ஒன்றிணைத்தல், பாடசாலை கட்டமைப்பு தொடர்பான மதியுரைக் கோவையின் பிரகாரம் செயற்படுவதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் பொறுப்பாக செயற்படல் வேண்டியமை, பிரசித்தியற்ற பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை இடமாற்றம் செய்யும் போது அந்த இடமாற்ற கட்டளைகளை நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல், பரீட்சைப் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கு விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், அனைத்து பாடசாலைகளுக்கும் பல்வேறு செயற்திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யும் போது பிரிதொரு பதிவேட்டினை பேணுமாறு பரிந்துரை செய்யப்படுகின்றது.

## 2. அறிமுகம்

### 2.1 பின்புலம்

இலங்கையில் 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் மொத்த வணக்கஸ்தல சூழலில் காணப்பட்ட கல்வி முறைமை மற்றும் ஆங்கிலேயர்களின் பிரதான பாடசாலை முறைமையுமே எமது நாட்டின் வரலாற்றில் ஆரம்ப காலத்தில் காணப்பட்ட பாடசாலைகளாகும். மிஷனரி பாடசாலை முறைமைக்கு ஒப்பான பிற்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சிங்கள பௌத்த பாடசாலைகள் மத சாயலில் தோற்றுவிக்கப்பட்டதுடன் முஸ்லிம் மற்றும் தமிழ்த் தலைவர்கள் முன்னின்று சாந்த தோமஸ், சாந்த பீட்டர்ஸ், ஸஹிரா, இந்து கல்லூரி போன்ற முஸ்லிம் பாடசாலை மற்றும் இந்துப் பாடசாலைகளை ஆரம்பித்தனர். சீ.டபிள்யூ.கன்னங்கராவின் கல்விக் கொள்கையூடாக இந்தப் பாடசாலை வலையமைப்பிற்கு நாடு பூராகவும் நகரங்களுக்கப்பால் மத்திய வித்தியாலயங்கள் 54 உருவாகின. 1970 வரையில் ஈரியகொல்ல கல்விக் கொள்கையென நாடு முழுவதும் நகரங்களை அண்மித்த பாடசாலைக்கிருந்த கேள்விக்கேற்ப டீ.எஸ்.சேனநாயக்க வித்தியாலயம், சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயம் போன்ற பாடசலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

பல்வேறு மத, அரசியல் மற்றும் சமூக காரணங்களுக்கக வேறுபாட்ட முறைகளில் பரவிய இலங்கையின் பாடசாலை கட்டமைப்பினுள் புதிய சிக்கல்கள் பல உருவாகிய காரணத்தினால் அரசிற்கு உடமையாக்கப்பட்ட நகர கேந்திர பாடசாலை மற்றும் அரசிற்கு உடமையாக்கப்படாத பாடசாலைகள் பௌதீக மற்றும் மனித வளங்களில் உயர் நிலையில் உள்ளமையோடு அவை தொடர்பில் பெற்றோரின் ஈர்ப்பும் அதிகரித்துச் சென்றுள்ளது. இந்தப் பாடசாலைகளுக்கு அனுமதி கிடைக்கப் பெறாதவர்கள் 1980 இல் இருந்து சர்வதேச பாடசாலைகளால் ஈர்க்கப்பட்டுள்ளனர். பிரசித்த பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளதோடு அதற்கு பிரதானமான காரணமாக நகரிலிருந்து தொலைவில் அமைந்துள்ள பாடசாலைகளில் நிலவும் பௌதீக மற்றும் மனித வளப் பற்றாக்குறையாகும். இது தவிர பாடசாலை அமைந்துள்ள சமூக சுற்றுச்சூழல் குறித்த பாடசாலையின் முன்னேற்ற கழகங்களின் செயற்பாடு அதிகரிப்பினால் அந்தக் கழகங்களில் பெருமளவில்நிதி தேக்கமடையத் தொடங்கியது. அதன் பிரதிபலனாக அந்த பாடசாலைகளின் பௌதீக வளங்கள் பெருமளவில் அதிகரித்தக் தொடங்கியதுடன் அக்காரணத்தினால் அந்தப் பாடசாலைகளுக்கு அனுமதி பெற நாட்டம் காட்டுதல் அதிகரித்த காரணத்தின் அவ்வாறான நிலைமையில் பெருமளவு மாணவர்கள் தொலை தூரத்திலிருந்தும் அந்தப் பாடசாலைகளுக்கு வருகை தருதல்

சாதாரண செயற்பாடாக உள்ளதுடன் அது பிள்ளைகள் பாரியளவில் சிரமங்களுக்கு உட்படும் காரணமாகும் என்பதும் அவதானிக்க முடிகிறது.

இந்தச் சிக்கல்களுக்குத் தீர்வாக அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் பல்வேறு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும், பிரசித்தியற்ற பாடசாலைகளின் பௌதீக மற்றும் மனித வளத்தினை முன்னேற்றுதலே இச்செயற்திட்டங்களின் நோக்கமாகும். அதற்கமைய, 2016 - 2020 காலப்பகுதியில் ‘‘அண்மிய பாடசாலை சிறந்த பாடசாலை’’ எனும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## 2.2 இலங்கையில் அரச பாடசாலைகளின் அடிப்படை விபரங்கள்

### 2.2.1 வருடாந்த நிதி ஏற்பாடு

இலங்கையில் அரச வருமானத்தில் 10 சதவீதத்திற்கும் அதிகமான தொகை கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளதோடு கல்வி அமைச்சின் செலவு அறிக்கைக்கேற்ப கடந்த 4 வருடங்களில் மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகள் தொடர்பாக விபரங்கள் கீழே காட்டப்பட்டள்ளன.

| | 2015<br>ரூபா<br>மில்லியன் | 2016<br>ரூபா<br>மில்லியன் | 2017<br>ரூபா<br>மில்லியன் | 2018<br>ரூபா<br>மில்லியன் |
|---|---|---|---|---|
| மீண்டெழும் | 157,956 | 168,591 | 173,378 | 175,579 |
| மூலதன | 21,175 | 24,776 | 27,539 | 36,362 |
| அரச வருமானம் (அரச கணக்கு) | 1,379,245 | 1,698,755 | 1,845,017 | 1,935,095 |
| சதவீதம் | 12.8 | 11.4 | 10.9 | 10.9 |

### 2.2.2 பாடசாலைகள் தொடர்பாக தகவல்கள்

கல்வி அமைச்சில் பாடசாலை கணக்கெடுப்பு அறிக்கை - 2017 இற்கு அமைவாக 2017 ஆம் ஆண்டின் இலங்கையின் அரச பாடசாலைகள் 10,194 உம் அரச அல்லாத பாடசாலைகள் 859 உம் சர்வதேசப் பாடசாலைகள் 265 உம் தனியார் பாடசாலைகள் 80 உம், விசேட பாடசாலைகள் 26 உம், பிரிவென 753 உம் உள்ளன. அரச பாடசாலைகளில் மாகாணப் பாடசாலைகள் 9,841 ஆகவும் தேசிய பாடசாலைகள் 353

ஆகவும் உள்ளன. மேலும், இதில் 200 இற்குப் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் 5,161 ஆகும். 5-14 வயதுக்குட்பட்ட மாணவர்களின் அனுமதி வீதம் 96.28 சதவீதமாக உள்ளதோடு தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையிலும் தொடர்ச்சியாக இருக்கும் வீதம் 88.75 சதவீதம் ஆகும். அவ்வாறே, 2017 ஆம் ஆண்டு வரையிலும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 93 ஆகும்.

### 2.2.3 ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தொடர்பான தகவல்கள்

பாடசாலைகளில் கற்பிக்கும் விடயங்கள் மற்றும் பாடசாலையின் முதன்மை மற்றும் இரண்டாம் நிலையின் அடிப்படையில் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளின் அமைப்புக்கேற்ப 2017 ஆம் ஆண்டில் மொத்த பாடசாலைகள் 10,194 இல் 353 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகும். அவ்வாறே பாடசாலைகளின் மொத்த மாணவர் எண்ணிக்கை 4,165,964 ஆன போதும் மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 241,591 ஆகும். அதற்கமைய, இலங்கையில் பாடசாலைகளில் ஆசிரிய மாணவ விகிதம் 1:17 ஆகும். பாடசாலைகளில் 3.5 சதவீதமான தேசிய பாடசாலைகளில் மொத்த மாணவர் தொகையில் 19 சதவீதம் கல்வியைப் பெறுகின்றனர். மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கையில் 40 சதவீதமான 1-5 தரம் (3 வகை) கொண்ட பாடசாலைகளில் கல்வியைப் பெற்றுக் கொள்வது மொத்த மாணவர் தொகையில் 16 சதவீதம் ஆகும்.

#### (அ) விடயப் பிரிவிற்கேற்ப ஆசிரியர் மாணவர் விகிதாசாரம்

தேசிய பாடசாலைகளில் விடயப் பிரிவுகளுக்கேற்ப ஆசிரிய மாணவ விகிதாசாரம் 1:16 முதல் 1:22 வரையிலான வீச்சில் காணப்படுவதோடு மாகாணப் பாடசாலைகளில் அது 1:13 தொடக்கம் 1:20 வரையான வீச்சில் உள்ளது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தரம் பிரித்தல் | பாடசாலை எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | ஆசிரியர் எண்ணிக்கை | மாணவ ஆசிரிய விகிதாசாரம் |
|---|---|---|---|---|
| தேசிய பாடசாலை | | | | |
| உயர்தரம் சகல விடயப் பிரிவுகள் (1ஏபீ) | 323 | 785,060 | 36,656 | 1.21 |

| | | | | |
|---|---|---|---|---|
| உயர் தரம் வணிக / கலை | 27 | 22,910 | 1,438 | 1.16 |
| சாதாரண தரம் வரை | 03 | 3,185 | 148 | 1.22 |
| | ------- | ----------- | ----------- | -------- |
| மொத்தம் | 353 | 811,164 | 38,242 | 1:22 |
| | === | ===== | ===== | ==== |
| **மாகாண சபை பாடசாலை வகை** | | | | |
| -------------------------------- | | | | |
| உயர்தரம் சகர விடயப் பிரிவுகள் (1ஏபீ) | 706 | 872,826 | 43,864 | 1.20 |
| உயர்தரம் வணிக / கலை (சீ) | 1,791 | 1,010,358 | 60,614 | 1.17 |
| சாதாரண தரம் வரை (2 வகை) | 3,285 | 790,774 | 61,460 | 1.13 |
| தரம் 5 வரை (3 வகை) | 4,059 | 680,838 | 37,411 | 1.18 |
| | ----------- | ----------- | ----------- | ----------- |
| **மொத்தம்** | **9,841** | **3,354,800** | **203,349** | **1.17** |
| | ===== | ===== | ===== | ===== |
| **முழு மொத்தம்** | **10,194** | **4,165,964** | **241,591** | |

**ஆதாரம்: கல்வி அமைச்சின் பாடசாலைக் கணக்கெடுப்பு அறிக்கை - 2017**

### (ஆ) பிள்ளைகளின் எண்ணிக்கைக்கேற்ப பாடசாலைகளை வகைப்படுத்தல்

ஒவ்வொரு பாடசாலையிலும் முழு மாணவர் எண்ணிக்கைக்கேற்ப பாடசாலைகளை வகை பிரித்தல் கீழே காட்டப்பட்டுள்ளவாறு உள்ளதோடு, மாணவர் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் வகைப்படுத்தலுக்கேற்ப இலங்கையிலுள்ள அரச பாடசாலைகள் 10,194 இல் 200 பிள்ளைகளுக்கும் குறைவான பாடசாலைகளின் எண்ணிக்கையானது 200 பிள்ளைகளை விட கூடிய பாடசாலைகளின் எண்ணிக்கையை விஞ்சியுள்ளது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **மாணவர் எண்ணிக்கை** | **பாடசாலைகளின் எண்ணிக்கை** | | **விகிதம்** |
|---|---|---|---|
| 1 - 50 இடைப்பட்டவை | 1486 | | 14.5 |
| 51 - 100 | 1560 | | 15 |
| 101 - 150 | 1138 | | 11.2 |
| 151 - 200 | 977 | | 9.6 |
| | --------- | | |
| | | 5161 | 51 |
| 200 இற்கு கூடியது | | 5033 | 49 |
| | | ---------- | |
| மொத்தம் | | 10,194 | |
| | | ===== | |

**(இ) மாகாண அடிப்படையில் மாணவர் எண்ணிக்கை குறைவான பாடசாலை**

மாணவர் எண்ணிக்கை 200 இற்கும் குறைவான பாடசாலைகள் 09 மாகாணத்திலும் பரவலாகக் காணப்படுவதோடு அப்பாடசாலைகளின் எண்ணிக்கை 419 முதல் 812 வரையான வீச்சில் காணப்படுகின்றது. பாடசாலை 5161 இல் கட்டாய பாடசாலை எண்ணிக்கை அமைந்துள்ளது. முறையே மத்திய, சபரகமுவ, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது. விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| **மாகாணம்** | **மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைவான பாடசாலைகளின் எண்ணிக்கை** |
|---|---|
| மேல் | 449 |
| சப்ரகமுவ | 650 |
| வடக்கு | 641 |
| கிழக்கு | 545 |
| தெற்கு | 536 |
| ஊவா | 495 |

| | |
|---|---|
| வடமத்திய | 419 |
| வடமேல் | 614 |
| மத்திய | 812 |
| | ----------- |
| மொத்தம் | 5161 |
| | ===== |

**(ஆதாரம் - கல்வி அமைச்சின் பாடசாலைக் கணக்கெடுப்பு அறிக்கை – 2017)**

## 2.3 கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) சட்டத்தின் விதிகளுக்கமையவும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 3(1)(ஈ), 5(2), 12(ஏ) பிரிவுகளின் படி எனது தலைமையின் கீழ் இந்த செயலாற்றல் கணக்காய்வு செய்யப்பட்டது.

## 2.4 கணக்காய்விற்கான தலைப்பினைத் தெரிவு செய்ததன் காரணம்

இலங்கையில் கல்வியறிவு இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை 2018 இன் படி 92.6 சதவீதமாக உள்ளதுடன் அது மனித மூலதனத்தை உயர்த்துவதற்கு காரணமாகவுள்ள அனுகூலமான பின்புலமாகும். இலங்கையின் இலவச கல்விக் கொள்கை இதற்குப் பங்களிப்புச் செய்துள்ளதோடு அனைவருக்கும் கல்வி சமமான முறையில் கிடைக்க வேண்டுமென்ற எண்ணம் இங்கு முக்கியமானதாகும். எவ்வாறாயினும், இலங்கையில் தற்கால சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பிரசித்திபெற்ற மற்றும் பிரசித்தி பெறாத பாடசாலைகள் எனும் தரப்படுத்தலுக்கு அமைய குறைந்த பிரசித்தியுடைய பாடசாலைகள் பல 200 மாணவர்களை விடக் குறைந்த பாடசாலையாக உள்ளது. மாணவர் எண்ணிக்கை 200 ஐ விடக் குறைந்த பாடசாலைகளின் எண்ணிக்கையானது முழுப் பாடசாலை எண்ணிக்கையில் 50.5 சதவீதமாக உள்ளது விசேடமானதாகும். நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் 4 இல் இலக்கு 1 இன் கீழ், 2030 ஆம் ஆண்டளவில் திறன்மிக்க கல்வியின் பலனைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சகல ஆண், பெண் பிள்ளைகளுக்கு இலவச, சமமான மற்றும் தரமான உயர்ந்த ஆரம்ப, இரண்டாம் நிலை கல்வியைப் பெற்றக் கொடுத்தல் பிரதான நோக்கமாகும். அதற்கேற்ப மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைந்த பாடசாலைகளினூடாக சமமான மற்றும் தரமான கல்வி எவ்வளவு தூரத்திற்கு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதைக் கண்டறியும் தேவை காணப்படுகின்றது.

## 2.5 கணக்காய்வு விடயப் பரப்பு

அதிஉன்னத கணக்காய்வு காரியாலயத்தின் சர்வதேசக் கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 3000 - 3200) அமைவாக, எனது கணக்காய்வு இடம்பெற்றுள்ளது. மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைவான பாடசாலைகள் அதிகளவில் அமைந்துள்ள மாவட்டமான குருநாகல், பதுளை இரத்தினபுரி போன்ற 03 மாவட்டங்களில் முறையே 104, 88, 100 பாடசாலைகள் மாதிரி பரிசோதனைக்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக மேல் மாகாணம் மாணவர் எண்ணிக்கை அதிகளவில் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் மாகாணமாக எண்ணிக்கை அதிகளவில் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் மாகாணமாக உள்ளபோது மாத மாதிர பரிசோதனைக்காக மேல் மாகாணத்தில் மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைந்த 61 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன.

பிரதேச முன்னேற்றத்தில் வேறுபாடு மற்றும் போக்குவரத்து குறைபாடு போன்று செயற்திட்டத்தின் சமச்சீரற்ற தன்மையால் கல்வித் துறையில் பொறுப்பான அனுபவமூடாக கட்டுப்படுத்துவதற்கு முடியாத நிலைமையினால் தீர்வான செல்வாக்கு தொடர்பில் இங்கு கலந்துரையாடப்படவில்லை.

## 2.6 கணக்காய்வு பிரவேசம்

கீழ் காணும் பிரதேசங்கள் இங்கு கவனத்திற் கொள்ளப்பட்டன.

(அ) பாடசாலைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் மற்றும் அறிவுறுத்தல்கள்

(ஆ) மாதிரி பரிசோதனைக்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தரவுகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

(இ) பாடசாலைகளைப் பௌதீகப் பரிசோதனை செய்வதனால் தரவுகளைப் பெற்றுக் கொள்ளல்.

(ஈ) அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் தரவுகளைப் பெற்றுக் கொள்ளல்.

(உ) இலங்கையில் பாடசாலைகள் தொடர்பாக சகல தரவுகளையும் வலய மற்றும் மாகாணக் கல்வி காரியாலயங்களிலும் கல்வி அமைச்சிலும் பெற்றுக் கொள்ளல் மற்றும் அவற்றைப் பகுப்பாய்வு செய்தல்.

(ஊ) பாடசாலை அபிவிருத்தி செய்தல் தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்ட அறிக்கையை கற்றறிதல்.

## 2.7 கணக்காய்வின் நோக்கம் மற்றும் மூலப்பிரமாணங்கள்

### 2.7.1 கணக்காய்வின் நோக்கம்

இலங்கையில் பாடசாலைகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமாக பாடசாலைகள் 200 இற்கும் குறைவான மாணவர்களை கொண்ட பாடசாலைகளாக உள்ளமையால் பாடசாலை மூடப்படும் நிலைமை காணப்படுவதோடு அவற்றின் ஆசிரிய மாணவ காரிய சாதாரண மட்ட மட்டுமின்றி பௌதீக, மனித வளங்களிலுள்ள சிக்கல்களை அறிந்து கொள்வதன் மூலம் அந்தப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலவச கல்வியில் அனுகூலங்கள் தேவையான மட்டத்தில் கிடைக்கின்றதா என்பது தொடர்பில் ஆராய்வது இந்தக் கணக்காய்வின் நோக்கமாகும்.

### 2.7.2 கணக்காய்வு மூலப்பிரமாணங்கள்

கீழ் காணும் விதிப் பிரமாணங்கள் மற்றும் நியமங்கள் இங்கு கவனத்திற்கு கொள்ளப்பட்டுள்ளது.

(அ) பாடசாலை அமைப்புக் குழு தொடர்பான அறிவுறுத்தல் கோவையின் 2 மற்றும் 3 ஆம் பந்தியின் மூலப்பிரமாணங்கள்.

(ஆ) ஆரம்ப பாடசாலை வலையமைப்பிற்காக இரண்டாம் நிலை பாடசாலை அபிவிருத்தி செய்தல் தேசிய வேலைத்திட்டம்.

(இ) பாடசாலையொன்றில் இருக்க வேண்டிய கல்விசார் ஊழியர்களை தீர்மானித்தல்.

(ஈ) புலமைப் பரிசில், க.பொ.த (சாதாரண தரம்) க.பொ.த (உயர்தரம்) பரீட்சைப் பெறுபேறு.

## 3. கணக்காய்வு அவதானிப்புக்களை விரிவாகக் கலந்துரையாடல்

### 3.1 பாடசாலைகளைப் புதிதாக அமைத்தல்

#### 3.1.1 புதிதாகப் பாடசாலைகளை அமைக்கையில் கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள்

பாடசாலை அமைப்பு தொடர்பான அறிவுறுத்தல் விதிக்கோவையின் 2.1 பந்தியின் படி புதிய பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கையில் குறித்த சிபாரிசை வழங்க வேண்டியது அதற்கான அத்தியாவசதியம் உள்ள சந்தர்ப்பத்தில் மட்டுமே அதற்கமைய கீழ் காணும் சந்தர்ப்பங்களில் புதிய பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கும் தேவைப்பாடு உருவாகக் கூடும்.

**(அ) பாடசாலைக்கான தூரம்**

(I) பிரதேசத்தினுள் வாழும் 10 வயதுக்குட்பட்ட 2 கிலோ மீற்றரை விட அதிக தூரம் கடந்து ஆரம்ப பாடசாலைக்குச் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்கள்

(II) பிரதேசத்தினுள் வாழும் 6-11 ஆம் தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 4 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரத்தைக் கடந்து இரண்டாம் நிலைப் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்கள்

(III) மேற்கூறப்பட்ட சரியான அளவுகளில் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைகள் அமைந்துள்ள போதும் பின்வரும் சந்தர்ப்பங்களில்,

- நடைபெற்றுவரும் பாடசாலைகளில் உள்ள இடப்பரப்பை விட அதிகமாக பாடசாலை செல்லும் பெயரில் உள்ள மாணவர்கள் குறித்த பிரதேசத்தினுள் வாழ்கின்றமை. (சனத்தொகை கணக்கெடுப்பு அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

- குறித்த தூர அளவில் பாடசாலைகள் அமைந்துள்ள போதும் வளம், ஆறுகள், மலைகள் போன்ற இயற்கை தடுப்புக்களின் காரணமாக அப்பாடசாலைகளை நடாத்த சிரமங்களை எதிர்கொள்ளுதல்.

**(ஆ) புதிய மக்கள் குடியிருப்பு உருவாகுதல்**

மகாவலி செயற்திட்டம் போன்ற புதிய மக்கள் குடியிருப்புக்கள் அல்லது விவசாய குடியேற்றம் அல்லது மாதிரிக் கிராமங்களை அமைத்தலில் பிரதேசத்தில் வாழுவதற்கு வரும் குழும்ப எண்ணிக்கையில் பாடசாலை செல்ல வேண்டிய வயதில் உள்ள மாணவர் எண்ணிக்கை மற்றும் அதன் பெருக்கத்திற்கேற்ப புதிதாகப் பாடசாலையொன்றை அமைக்க முடியும்.

**(இ) புதிதாகப் பாடசாலையொன்றை ஆரம்பிக்கப் பிரேரணைகளைச் சமர்ப்பித்தல்.**

புதிய பாடசாலையொன்றை ஆரம்பிக்கையில் இருவிதமாக சமர்ப்பிக்கக்கூடிய பிரேரணைகள், கீழுள்ளவாறு கவனத்திற் கொள்ளப்படலாம்.

(I) வலயக் கல்வி காரியாலயத்தின் திட்டமில் பிரிவினால் சமர்ப்பிக்கப்படும் பிரேரணைகளுக்கேற்ப

(II) பிரதேசத்திலுள்ள பெற்றோர், கிராம அலுவலகர் அல்லது வெளி அமைப்பு மூலம் சமர்ப்பிக்கப்படும் பிரேரணைகளுக்கேற்ப

**(ஈ) வலயக் கல்வி பணிப்பாளரினால் நடவடிக்கை எடுத்தல்**

மேலே (இ) இற்கு அமைய பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டவிடத்து வலயக் கல்வி பணிப்பாளரினால் கீழுள்ள காரணிகள் தொடர்பில் குறித்த தரவுகள் மற்றும் தொகை ஏடுகளைக் கவனத்திற் கொண்டு பிரேரணை தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(I) குறித்த பிரதேசத்தினுள் அவ்வகையான பாடசாலை இல்லாமை.

(II) குறித்த போசனைப் பிரதேசத்தினுள் புதிய பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்குப் போதியளவு மாணவர் எண்ணிக்கை உள்ளமை.

(III) குறித்த போசனைப் பிரதேசத்தினுள் உள்ள பாடசாலை / பாடசாலைகளில் சரியான கல்விமட்டத்திற்கு சகல பிள்ளைகளுக்கும் இடம் போதாமை.

(IV) புதிய பாடசாலையொன்றை அமைப்பதற்குப் பொருத்தமான மற்றும் போதுமான கட்டடங்களுக்கு நிலம் உள்ளமை.

### 3.1.2 பிரதேச மற்றும் வலய மட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைகள்

---

2018 ஆம் ஆண்டில் இலங்கையில் தேசிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததோடு மாகாணப் பாடசாலைகள் 17 ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

கல்விப் பிரதேச மட்டத்தில் எடுத்துக் கொண்டால் 2000 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட கல்விப் பிரதேசத்தில் மாணவர் எண்ணிக்கை மிகவும் குறைந்த பல பாடசாலைகள் உள்ளமை மாதிரி பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதுடன் அப்பாடசாலைகள் கல்வி வயங்கள் 22 இனுள் 53 பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை 01 தொடக்கம் 465 வரையான வீச்சில் உள்ளது. அம்பாறை / அட்டாஞ்சேனை வலயத்தில் 4 பாடசாலைகளும், மன்னார் / மடு வலயத்தில் 05 பாடசாலைகளும், திருகோணமலை / மூதூர் வலயத்தில் 04 பாடசாலைகளும் நிக்கவட்டிய, வாரியபொல வலயத்தில் 05 பாடசாலைகளும், நிக்கரவெட்டிய வலயத்தில் 04 பாடசாலைகளும், இரத்தினபுரி, எகலியகொடை, குருவிட்டை, அயகம, பலாங்கொடை வலயங்களில் 03 பாடசாலை வீதமும், கொலன்னாவ வலயத்தில் 04 பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், அவற்றின் மாணவர் எண்ணிக்கை குறைந்தளவிலேயே உள்ளன.

#### (அ) கிராமிய மட்டத்தில் பாடசாலையொன்றை எதிர்பார்த்தல்

நிக்கவரெட்டிய, மினுவாங்கொடை, மதுகம, இரத்தினபுரி, ஹோமாகமை, பண்டாரவெல்ல, கல்வி வலயங்களில் மாதிரிப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட / மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட பல பாடசாலைகளுக்குரிய அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(I) 14 வருடங்களுக்கு முன்பு மாணவர்கள் இல்லாமையால், மூடப்பட்டிருந்த ஊராகொடை கனிஷ்ட வித்தியாலயம் பிரதேசத்தில் வாழ்வோரின் வேண்டுகோளுக்கமைய சுற்றுபுறக் கிராமங்களிலுள்ள பிள்ளைகளுக்குப் பாடசாலையொன்று இல்லாமையாலும் மீண்டும் 2016 ஆம் ஆண்டு 20 பிள்ளைகளுடன் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்தப் பாடசாலைக்காக போதுமான கட்டட விடுதி மற்றும் ஏனைய பௌதீக வளங்கள் இருக்கவில்லை. 1 தொடக்கம் 11 வரையான தரங்களை

கொண்டுள்ள கட்டுவப்பிட்டிய வித்தியாலயம் 04 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. இதுவரையிலும் 57 மாணவ மாணவியர் ஊரங்கொடை கனிஷ்ட வித்தியாலயத்தில் கல்வி பயிலுகின்றனர்.

(II) இப்பாடசாலைக்கு 3 கிலோமீற்றர் தொலைவில் அமைக்கப்பட்டு பல வருடங்களுக்கு மூடப்பட்ட தொடம்பிட்டிய ஆரம்ப பாடசாலை 2018 ஆம் ஆண்டில் பிரதேசவாசிகளின் வேண்டுகோளுக்கு அமைய மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போதும் அப்பாடசாலையில் மாணவர் எண்ணிக்கை 18 ஆகும்.

(III) ஒரு கிராமத்திலுள்ள பாடசாலை மாணவர்களை வேறொரு கிராமப் பாடசாலைக்கு அனுப்புவதற்குப் பெற்றோர் விரும்பாமையே இப்பாடசாலைகள் இரண்டும் மீள ஆரம்பிப்பதற்குக் காரணமாக இருந்தது என்பது களப் பரிசோதனையின் போது அறியவந்துள்ளது.

**(ஆ) புதிய பாடசாலையொன்றை ஆரம்பிக்கையில் பூரணப்படுத்தப்பட வேண்டிய மூலப்பிரமாணங்கள்**

2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரெஜி ரணதுங்க ஆரம்ப பாடசாலையில் தரம் 5 இல் தேர்ச்சிபெறும் மாணவர்களை அனுமதிக்கப் போதியளவு வசதியுள்ள பாடசாலையொன்று மினுவான்கொடை நகர எல்லைக்குள் இல்லாமையால் 2017 ஆம் ஆண்டு ரெஜி ரணதுங்க வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(I) புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த ரெஜி ரணதுங்க வித்தியாலயத்திலிருந்து சுற்றுவட்டாரத்தில் இடைநிலைப் பாடசாலைகளுக்குள்ள தூரமானது பாடசாலை அமைப்பு நடைமுறை தொடர்பான அறிவுறுத்தல் கோவையின் மூலப்பிரமாணங்களை பூரணப்படுத்தியிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| பாடசாலை | தூரம் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| ---------------- | -------- | -------------------- |
| சனாதிபதி வித்தியாலயம் | 500 மீற்றர் | 2479 |
| புருளைபிட்டிய மகா வித்தியாலயம் | 1 கிலோ மீற்றர் | 1300 |
| பெல்வத்தை ரத்னசாரா மத்திய வித்தயாலயம் | 1½ கிலோ மீற்றர் | 1080 |
| நாலந்த பாலக மத்திய வித்தியாலயம் | 2 கிலோ மீற்றர் | 3016 |
| நாலந்த மகளிர் மத்திய வித்தியாலயம் | 2 கிலோ மீற்றர் | 2744 |

(II) பாடசாலை கட்டமைப்பு நடைமுறை தொடர்பான அறிவுறுத்தல் விதிக்கோவையின் படி இயங்கிக்கொண்டிருக்கும் பாடசாலைகளிலுள்ள இடவசதியை விட பாடசாலை செல்லும் வயதிலுள்ள மாணவர் எண்ணிக்கை பிரதேசத்தினுள் அதிகரித்துள்ளமை வலயக் கல்விப் பணிப்பாளரினால் புதிய பாடசாலையொன்றை ஆரம்பிக்கையில் உறுதிப்படுத்திக்கொள்ளப்படல் வேண்டும். இங்கு பிரதேசத்தினுள் இவ்வகையான பாடசாலையொன்று புதிய பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான மாணவர் எண்ணிக்கை உள்ளமை, மற்றும் தற்போதுள்ள பாடசாலைகளில் இடவசதி போதாமை போன்ற காரணங்கள் தொடர்பில் கவனமெடுக்கப்பட்டிருக்கவில்லை.

(III) அவ்வாறிருக்க மினுவன்கொடை வலயக் கல்விப் பணிப்பாளரின் 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய பவ/மிக்ர/சல 02/12 இலக்கம் கொண்ட மேல் மாகாண கல்விச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கமைய, இப்புதிய பாடசாலை சுற்றுவட்டத்தில் இடைநிலைப் பாடசாலைகள் 06 உள்ளதாகவும், புதிய பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதன் பின் இப்பாடசாலையின் மாணவர் எண்ணிக்கை குறைவடையும் என்பதையும் அவ்வாறே 2012 ஆம் ஆண்டில் மேற்கூறிய மூலப்பிரமாணங்களைக் கருத்திற் கொள்ளாது ஆரம்பிக்கப்பட்ட ரெஜி ரணதுங்க ஆரம்ப பாடசாலையினால் சுற்றுச்சூழலிலுள்ள 06 ஆரம்ப பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கை மேலே காட்டப்பட்டுள்ளவாறு குறைந்துள்ளதெனவும் 2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதிக்கான புள்ளிவிபரத் திணைக்களப் பகுப்பாய்வு செய்கையில் வெளிப்பட்டுள்ளது. அதற்கமைய அப்பாடசாலை சுற்றுச்சூழலில் உள்ள 800 மீற்றர் தொடக்கம் 4 கிலோமீற்றர் வரையான தூரத்தினுள்

அமைந்துள்ள இப்பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை அந்த வருடத்தில் 04 தொடக்கம் 112 இற்கு இடைப்பட்டதாகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பாடசாலையின் பெயர் | ரெஜி ரணதுங்க ஆரம்ப பாடசாலையிலிருந்து உள்ள தூரம் | மாணவர் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| மினு/வாவிய ஸ்ரீ சுகதபால க.வித்தியாலயம் | 800 மீற்றர் | 4 | 10 | 35 | 21 | 5 |
| மினு/பொல்வத்த ஸ்ரீ ரதனசார மத்திய வித்தியாலயம் | 1 கிலோ மீற்றர் | 112 | 110 | 123 | 101 | 84 |
| மினு/யாகொடமுள்ள ஆரம்ப பாடசாலை | 2 கிலோமீற்றர் | 17 | 35 | 24 | 36 | 24 |
| மினு/கொட்டுகொட ராஹுல ஆரம்ப பாடசாலை | 4 கிலோமீற்றர் | - | - | - | 90 | 80 |
| மினு/ஒபாத குணாணந்த ஆரம்ப பாடசாலை | 3.5 கிலோமீற்றர் | 12 | 26 | 16 | 25 | 19 |
| மினு/கல்லொழுவ ரோமன கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலயம் | 1.5 கிலோமீற்றர் | 23 | 9 | 11 | 11 | 20 |

(IV) இந்த காரணங்களால் வலயக் கல்விப் பணிப்பாளரினால் சிபாரிசு செய்கையில் ரெஜி ரணதுங்க மாதிரி ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையிலுள்ள பாடசாலையான சனாதிபதி வித்தியாலயம் வலயத்திலேயே உயர்ந்து சாதனங்களைக் கொண்ட பாடசாலையாதனாலும் புதிய கட்டிடங்களை அமைப்பதற்கு இப்பாடசாலையின் இடவசதி உள்ளமையாலும் புதிய இரண்டு மாடிக் கட்டிடமொன்ற அமைத்து அதில் தரம் 6 இற்கான வகுப்பறைகளின் எண்ணிக்கை 04 தொடக்கம் 07 வரையில் அதிகரிக்கப்பட்டன. அவ்வாறிருக்க வலயக் கல்வி அபிவிருத்திக் குழு மற்றும் மதியுரை

செயற்குழுவின் அனுமதியுடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்குரிய புதிய இடைநிலைப் பாடசாலையாக இப்பாடசாலை அமைக்கப்பட்டமை 2017 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளது.

(v) ரெஜி ரணதுங்க ஆரம்ப பாடசாலையில் தரம் 5 தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு போதியளவு வசதியுடைய பாடசாலையொன்று இல்லாமையால் இந்த இடைநிலை பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதெனினும் வலயத்தைச் சுற்றியுள்ள ஏனைய இடைநிலைப் பாடசாலைகளுக்கு நேரக்கூடிய தாக்கத்தைக் கருத்திற் கொண்டு புதிய பாடசாலைக்கு மாணவர்களை உள்ளீர்க்கையில் புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்ச்சிபெற்ற மாணவர்களை மட்டும் அனுமதித்தும் தேறாத மாணவர்களை இப்புதிய பாடசாலைக்கு அனுமதி வழங்கப்பட்டதெனவும் பணிப்பாளரினால் நிர்வாகப் பணிப்பாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.

(vi) இப்பாடசாலையின் சுற்றுச்சூழலில் உள்ள ஏனைய பாடசாலைகளைப் பாதுகாக்கும் இம்மூலப்பிரமாணம் உருவாக்கப்பட்ட போதிலும் ரெஜி ரணதுங்க ஆரம்ப பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளுக்காக மீளவும் வேறொரு பாடசாலைக்கு செல்ல வேண்டியுள்ளமை இப்பாடசாலையை ஆரம்பித்துள்ளதன் நோக்கமான ஆரம்ப பாடசாலைக்குப் பொருத்தமான புதிய இடைநிலைப் பாடசாலைகளை ஆரம்பிக்கும் நோக்கை நிறைவேற்றுவதில் தாக்கத்தை ஏற்படுத்துவது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே சமனான 06 வகுப்புக்களை கொண்ட ஆரம்பப் பிரிவு சமமான 04 வகுப்புக்களைக் கொண்ட இடைநிலைப் பிரிவிற்குள் உள்வாங்குகையில் புலமைப் பரிசில் பரீட்சை ஆரம்பப் பிரிவில்சகல மாணவர்களும் தேர்ச்சி பெற்றாலும் இடைநிலைப் பிரிவிற்கு அப்பிள்ளைகளை அனுமதிக்கையில் கட்டாயமாக அனுமதி செய்யும் வெட்டுப் புள்ளியை உயர்த்த வேண்டியிருந்தமையால் திரும்பவும் மாணவர்களும் பெற்றோரும் புதிய பாடசாலையொன்றை தேட வேண்டிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. புதிய பாடசாலையொன்றை உருவாக்கும் போது கட்டிடங்கள் உள்ளிட்ட ஏனைய பௌதீக வளங்கள் நவீன முறைமைக்கமைய பூரணப்படுத்தப்படுவதால் மாணவர்கள் மட்டுமன்றி பெற்றோரையும் கவரக்கூடியதாக உள்ளமை தவிர்க்க முடியாத காரணமாகும். எவ்வாறாயினும், புதிய பாடசாலையை அமைத்தல்

இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைகளைப் பாதுகாத்தல் போன்ற இரு காரணிகளையும் ஒரே நேரத்தில் நிறைவேற்றிக் கொள்ள வேண்டியிருப்பதால் பொதுமக்களின் வளங்கள் செயலற்று அல்லது குறைப் பயன்பாட்டுடன் முயற்சியற்றிருப்பது அவதானிக்கப்பட்டது.

**(இ) புதிய பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்கான குறைந்த நிலப்பரப்பு தொடர்பில் கவனமெடுத்தல்**

புதிய பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்கான பிரேரணை நியாயப்படுத்தப்பட்டதன் பின்பு மாகாண கல்விப் பணிப்பாளரினால் புதிய பாடசாலையை அமைப்பதற்குப் பொருத்தமான காணி உள்ளதா என்பது தொடர்பாக திருப்தியடையல் வேண்டும். ஆரம்பப் பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்குக் குறைந்தது 02 ஏக்கர் நிலப்பரப்பு அவசியம் என பாடசாலை அமைப்பு நடைமுறை தொடர்பான அறிவுறுத்தல் விதிக்கோவையின் 2.2(ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 200 மாணவர்களுக்கும் குறைவான பாடசாலை தொடர்பில் பரீட்சிக்கையில் அந்த விதிமுறைகள் மீறப்பட்டு பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் நிக்கவெட்டிய வலயத்தில் 200 மாணவர்களை விட குறைந்த பாடசாலைகள் 104 இன் 25 பாடசாலைகள் குறித்த நில அளவுகளின்றி அமைக்கப்பட்ட பாடசாலைகள் என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஈ) பாடசாலைகளுக்கிடையிலான தூரம்**

பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல் பாடசாலை அமைப்பு நடைமுறை தொடர்பாக அறிவுறுத்தல் விதிக்கோவையில் 2.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள போதும் பாடசாலைகளுக்கிடையிலான தூர எல்லைக்குள் தொடர்பில் கருத்திற் கொள்ள வேண்டியுள்ளதுடன் இங்கு மாணவர் சனத்தொகை தொடர்பில் உறுதி செய்யப்படாது பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. இக்காரணங்களால் புதிதாக அமைக்கப்பட்ட / மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் மாணவர் எண்ணிக்கை குறைவடைய இது காரணமாக இருந்ததுடன் சுற்றுவட்டாரத்தில் உள்ள பாடசாலைகளிலும் மாணவர் எண்ணிக்கை குறைவடைய இது தாக்கம் புரிந்துள்ளது. பௌதீகப் பரிசோதனைக்குட்பட்ட 22 முதல் 146 இற்கு இடைப்பட்ட மாணவர்களைக் கொண்ட 13 பாடசாலைகள் அருகிலுள்ள பாடசாலைக் கிடையிலுள்ள தூரம் 500 மீற்றர் முதல் 5 கிலோ மீற்றர் வரையான வீச்சினுள் உள்ளது.

இதற்கமைய, முழுமையாக அரச பாடசாலைகளின் எண்ணிக்கையில் 200 மாணவர்களை விடக் குறைவான பாடசாலைகளின் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் உள்ளபோதும் மூலப்பிரமாணங்களுக்கு புறம்பாக பாடசாலைகள் அமைக்கப்பட்டிருந்தன.

### 3.1.3 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பாடசாலைகளின் அமைப்பு

புதிய பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்கு மேற்கூறிய மூலப்பிரமாணங்கள் ஆதாரமாக உள்ள போதும் 2000 ஆம் ஆண்டின் பின் ஆரம்பிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைந்த பாடசாலைகள் 373 ஆனதுடன் அவற்றில் 50 சதவீதமானவை பிரதிநித்துவப்படுத்துவது கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்கள் எண்பது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

2000 ஆம் ஆண்டின் பின் ஆரம்பிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 10 இலும் குறைந்த பாடசாலைகள் இவ்விரு வலயங்களில் மட்டும் 06 அமைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன் விரிவாக்கத்தின்படி ஒரு மாணவனை மட்டும் கொண்ட பாடசாலை 1 உம், 05 மாணவர்களைக் கொண்ட பாடசாலை 01 உம், 06 மாணவர்களைக் கொண்ட பாடசாலை 1 உம், 08 மாணவர்களைக் கொண்ட பாடசாலை 2 உம், 09 மாணவர்களைக் கொண்ட பாடசாலை 01 உம் ஆகும். 2018 ஆம் ஆண்டு வரையான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| மாகாணம் மற்றும் மாவட்டம் | 2000 ஆம் ஆண்டின் பின் அமைக்கப்பட்ட பாடசாலைகளின் தொகை (மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைவாக) | | | | | முழு பாடசாலை தொகை |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் 1 - 10 தொடக்கம் | மாணவர் 11 - 50 இடையில் | மாணவர் 51 - 100 இடையில் | மாணவர் 101 - 150 இடையில் | மாணவர் 151 - 200 இடையில் | |
| **கிழக்கு** | | | | | | |
| அம்பாறை | - | 10 | 19 | 07 | 05 | 41 |
| மட்டக்களப்பு | 02 | 10 | 06 | 06 | 06 | 30 |
| திருகோணமலை | - | 12 | 10 | 08 | 10 | 40 |
| மொத்தம் | 02 | 32 | 35 | 21 | 21 | 111 |

**வடக்கு**

-----------

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வவுனியா | 01 | 03 | 04 | 02 | 01 | 11 |
| முல்லைத்தீவு | 01 | 04 | 04 | 03 | 03 | 15 |
| மன்னார் | 02 | 13 | 09 | 04 | 03 | 31 |
| கிளிநொச்சி | - | - | 03 | 03 | 02 | 08 |
| யாழ்ப்பாணம் | - | 02 | 04 | 03 | 02 | 11 |
| | ------- | ------- | ------- | ------- | ------- | ------- |
| மொத்தம் | 04 | 22 | 24 | 15 | 11 | 76 |
| | ==== | ==== | ==== | ==== | ==== | ==== |
| | ------- | ------- | ------- | ------- | ------- | ------- |
| இரு மாகாணத்தினதும் மொத்தம் | 06 | 54 | 59 | 36 | 32 | 187 |
| | ==== | ==== | ==== | ==== | ==== | ==== |

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தாக்கத்தை ஏற்படுத்திய யுத்தத்தின் பின் அப்பிரதேசத்திலுள்ள உடனடியாக அபிவிருத்தி செய்யும் நோக்கில் நடவடிக்கை எடுக்கையில் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதென அனுமானம் செய்ய முடியுமெனினும் இங்கு குறித்த சுற்றறிக்கையின் தேவைப்பாட்டினை சரியாக ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 பாடசாலைகளை மூடுதல்

இயங்கிக் கொண்டிருக்கும் சில பாடசாலைகள் கடந்த சில வருடங்களில் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததோடு அது தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### 3.2.1 தற்காலிகமாக மூடப்பட்ட பாடசாலைகள்

#### (அ) மாணவர் இல்லாமை அல்லது வேறு காரணங்களின் செல்வாக்கு

2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையிலும் 93 பாடசாலைகள் மாணவர்கள் இல்லாமை, நாட்டு நிலவரம் மற்றும் வேறு காரணங்களுக்காத் தற்காலிகமாக மூடப்பட்டிருந்ததோடு 2018 ஆம் ஆண்டினுள் மட்டும் 101 பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததாக கல்வி அமைச்சின் புள்ளி விபரவியல் தகவல் அடிப்படையில் அவதானிக்கப்பட்டது.

### (ஆ) மாணவர்களுக்கான மொத்த செலவு தொடர்பில் கவனமெடுத்தல்

மிகக் குறைந்த மாணவர் எண்ணிக்கையை கொண்ட பாடசாலையை நடாத்துவது மிக அதிகளவில் மாணவருக்கான செலவை ஏற்படுத்தும் என்பதால் அவ்வாறான பாடசாலையொன்றை தொடர்ந்தும் நடாத்துவதா என்பதை விசேடமாக கவனத்திற் கொள்ள வேண்டுமென பாடசாலை அமைப்பு நடைமுறை தொடர்பாக அறிவுறுத்தல் விதிக்கோவையில் 3.2.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தரமொன்றில் சாதாரணமாக மாணவர் எண்ணிக்கை 10 இலும் குறைவாகவுள்ள பாடசாலையெனில் அங்கு கல்வி கற்கும் தூரம் தொடர்பான விதிமுறைகளை மீறாத வகையில் வேறு பாடசாலைக்கு / பாடசாலைகளுக்கு அனுப்ப முடியுமெனின் அப்பாடசாலையை மூடமுடியும். தனிக் கிரயங்களில் அல்லது இயற்கைத் தடை காரணமாக போக்குவரத்து சிரமங்கள் உள்ள பிரதேசங்களில் எந்தளவு சிறிய பாடசாலையாயினும் மூடப்படலாகாது. எனினும், மூடப்படக்கூடிய மேற்கூறிய மூலப்பிரமாணங்கள் பூரணப்படுத்தப்பட்ட பாடசாலையும் மாணவர்களுக்கு வேறு சிறந்த பாடசாலையொன்று கிடைக்கும் வரை மூட முடியுமான என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2.2 பாடசாலைகளை ஒன்றிணைத்தல் அல்லது அதிக வசதியைக் கொண்ட பாடசாலைக்கு அனுப்புதல்

### (அ) பாடசாலைகளை ஒன்றிணைத்தல்

பாடசாலை அமைப்பு நடைமுறை விதிக் கோவையின் 3.2.1 ஆம் பிரிவிற்கமைய யாதேனும் ஆரம்ப பாடசாலையொன்றில் ஏதாவதொரு வகுப்பில் சாதாரணமாக மாணவர் எண்ணிக்கை 10 அல்லது அதற்குப் குறைவெனில் அம்மாணவர்கள் அனைவரையும் வாழ்விடங்களிலிருந்து 2 கிலோமீற்றர் தூரத்தினுள் வேறொரு ஆரம்ப பாடசாலை அல்லது ஆரம்ப பிரிவைக் கொண்ட பாடசாலை காணப்படுமாயின் மேற்கூறிய பாடசாலையை அந்தப் பாடசாலையுடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

### (ஆ) அதிக வசதிகளைக் கொண்ட அண்மித்த பாடசாலைக்கு அனுப்புதல்

பண்டாரவளை, இரத்தினபுரி, நிக்கவரெட்டிய கல்வி வலயங்களில் முறையே 04, 12 மற்றும் 11 பாடசாலைகளை 04 வருடங்களில் ஒவ்வொரு தரத்திலுமுள்ள மாணவர் எண்ணிக்கை தொடர்பில் சோதனையிடுகையில் இப்பாடசாலைகளில்

பல வருடங்களாக ஒரு வகுப்பில் 10 மாணவர்களை விடக் குறைவாகவே இருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இப்பாடசாலைக்கு அண்மையில் வேறு மாற்றீட்டுப் பாடசாலைகள் உண்மையும் அவதானிக்கப்பட்டதுடன் மாணவர்களுக்கு மிகச் சிறந்த கல்வியைப் பெறும் சந்தர்ப்பமுள்ள பாடசாலைக்கு இம்மாணவர்களை அனுப்பக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளமை தொடர்பில் குறித்த அதிகாரிகளால் ஆராயப்பட்டிருக்கவில்லை.

**(இ) சுற்றறிக்கைக்குரிய தேவைப்பாடுகளுக்குப் புறம்பான தேவைகளுக்காகப் பாடசாலைகளை நடாத்துதல்**

ஆசிரியர்களின் அல்லது வேறு நபர்களின் தேவைகளுக்காக இப்பாடசாலைகளை நடாத்துவதற்காகவும் பாடசாலைகளை மூடுவதால் பிள்ளைகளுக்கு சிறந்த பாடசாலையொன்று கிடைக்கும் சாத்தியம் உள்ளதாக என ஆராய்ந்து தேவையான பாடசாலைகளை மூட முடியுமெனவும் பௌதீகச் சோதனையி அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, மாதிரி சோதனைக்குட்படுத்தப்பட்ட பண்டாரவளை கந்தேஆரவ வித்தியாலயம் 22 மாணவர்களைக் கொண்ட பாடசாலையாக உள்ளதுடன் பாடசாலையொன்று அமைக்க இருக்க வேண்டிய நிலப்பரப்பு இன்றி அமைக்கப்பட்ட பாடசாலையாகும். பண்டாரவளை மத்திய மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் இப்பாடசாலை அமைந்துள்ள காரணத்தால் அந்த பிள்ளைகளுக்குப் பிரசித்திபெற்ற பாடசாலைக்கு செல்ல முடியாதுள்ளது.

## 3.3 மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைந்த பாடசாலைகளின் செயலாற்றல்

பண்டாரவளை, நிக்கவரட்டிய, இரத்தினபுரி, ஹோமாகம, பிலியந்தல போன்ற கல்வி வலயங்களில் 200 மாணவர்களை விட குறைவான பாடசாலைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் இப்பாடசாலைகளின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### 3.3.1 மாணவர் எண்ணிக்கை மிகவும் குறைதல்

விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளவாறு ஆகும்.

#### (அ) மாணவர் எண்ணிக்கை கிரமமாக குறைவடைதல்

(I) மாதிரி சோதனைக்குட்படுத்தப்பட்ட ஆரம்பப் பிரிவு மட்டும் நடாத்தப்பட்டு வந்த பண்டாரவளை மற்றும் இரத்தினபுரி கல்வி வலயங்களில் முறையே 14 மற்றும் 6 பாடசாலைகள் 2014 முதல் 2018 வரையான காலப்பகுதியில் சாதாரணமான மாணவர் எண்ணிக்கை 9 தொடக்கம் 59 வரையான வீச்சில் உள்ளதோடு அப்பாடசாலைகளில் 2014 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை மாணவர்கள் 519 - 427 வரை 18 சதவீதத்தால் தொடர்ச்சியாக மாணவர்கள் குறைவடைதல் அவதானிக்கப்பட்டது.

(II) ஆரம்பப் பிரிவு மற்றும் இடைநிலைப் பிரிவுகளில் மாணவர் எண்ணிக்கை குறைவான பாடசாலைகளில் கடந்த 5 ஆண்டுகளில் மாணவர் எண்ணிக்கை தொடர்பில் தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததில் மாணவர் எண்ணிக்கை தொடர்ச்சியாக குறைவது அவதானிக்கப்பட்டது. மாதிரி சோதனைக்குட்படுத்தப்பட்ட பண்டாரவளை, இரத்தினபுரி கல்வி பிரிவுகளில் 18 பாடசாலைகளில் ஆரம்ப மற்றும் இடைநிலைப் பிரிவுகளில் 2018 ஆம் ஆண்டில் சாதாணமான மாணவர் எண்ணிக்கை முறையே 32 மற்றும் 33 இற்கு இடைப்பட்டதாகும். ஆசிரியர்கள் பண்டாரவளை மற்றும் கண்டி வலயங்களில் 7 மற்றும் 4 உம் ஆகும்.

#### (ஆ) மாணவர் எண்ணிக்கை குறைவெனினும் உயர்தர வகுப்புக்களை நடாத்துதல்

மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைந்த பல பாடசாலைகளில் ஆரம்ப, ஆரம்ப மற்றும் இடைநிலைப் பிரிவுகள் மட்டும் உள்ளதன்றி உயர்தரம் நடாத்தப்படும் பாடசாலைகளும் அடங்குகின்றன. மாதிரி சோதனைக்குட்படுத்தப்பட்ட கல்விப் பிரதேசங்களில் மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைவெனினும் உயர்தரம் கற்பிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறும் பல பாடசாலைகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பாடசாலையின் பெயர் | விடயப் பிரிவு | மாணவர் எண்ணிக்கை | ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இர/வித்யதீப மகா வித்தியாலயம் | கலை | 31 | 2 |
| இர/சித்தார்த்த மகா வித்தியாலயம் | கலை, | 9 | 6 |
| | வர்த்தகம் | 3 | 3 |
| மேமா/ஹோ தீபங்கொடை ஸ்ரீ மேதானந்த | கலை, | 36 | 07 |
| மகா வித்தியாலயம் | வர்த்தகம் | 14 | 3 |



இப்பாடசாலைகள் பலவற்றில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்தமையும் குறைந்த மாணவர் எண்ணிக்கை பல வருடங்களாகக் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறு குறைவான மாணவர் எண்ணிக்கை காணப்படுகின்றமை பெற்றோர் இப்பாடசாலைகளுக்குப் புதிதாக மாணவர்களை சேர்க்க முன்வராமையின் செல்வாக்கு செலுத்துகின்றது.

### 3.3.2 வெற்றிகரமான பரீட்சைப் பெறுபேறுகள்

விபரங்கள் கீழ் காட்டப்பட்டவாறாகும்.

#### (அ) பிள்ளைகளை அனுமதிக்கையில் பெறுபேறுகளைக் கவனத்திற் கொள்ளல்

பெற்றோர் தமது பிள்ளைகளுக்குப் பாடசாலையொன்றைத் தேர்ந்தெடுக்கையில் பாடசாலைகளின் செயலாற்றலை பிரதிபலிக்கும் பிரதான மூலப்பிரமாணமான பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் கவனமெடுக்கப்படல் வேண்டும். புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளும், இடைநிலைப் பாடசாலையெனின் க.பொ.த

(சாதாரண தரம்), (உயர்தரம்) பெறுபேறுகளும் கவனத்திற் கொள்ளப்படும். அண்மையிலுள்ள பாடசாலையில் பிள்ளையை அனுமதிக்காது வேறு பாடசாலையை நோக்கிச் செல்வதற்கு இக்காரணி பெருமளவில் செல்வாக்கு செலுத்தியுள்ளமையை காணமுடிகின்றது. பாடசாலைகளில் புலமைப் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் க.பொ.த சாதாரண தரம் பெறுபேறுகளின் வெற்றியானது குறித்த பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுமதிக்கையில் கவனத்திற் கொள்ளப்படும் முக்கிய காரணியாகும்.

**(ஆ) வெற்றிகரமான புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்**

(i) பண்டாரவளை, இரத்தினபுரி, மற்றும் ஹோமாகம கல்வி வலயங்களில் மாதிரி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 14 பாடசாலைகளில் கடந்த 3 ஆண்டுகளில் புலமைப் பரிசில் பரீட்சை சம்பந்தமான தரவுகளின் படி முறையே 04, 04 மற்றும் 06 பாடசாலைகளில் முறையே மாணவர் எண்ணிக்கை 20 தொடக்கம் 43 வரையான வீச்சிலும், 8 முதல் 32 வரையான வீச்சிலும் 34 முதல் 180 வரையான வீச்சிலும் ஆகும். இப்பாடசாலைகளில் புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டும்புள்ளி பெற்றுக்கொள்ளும் செயலாற்றல்யை கடந்து 03 ஆண்டுகளில் மாணவர்கள் 02 அல்லது 03 என குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றது. இதில் விசேட அவதானிப்பானது சோதனைக்குட்படுத்தப்பட்ட 14 பாடசாலைகளில் 10 பாடசாலைகளில் எந்தவொரு மாணவரும் கடந்த 3 வருடங்களில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றிருக்காமை ஆகும்.

(ii) ஆரம்பப் பிரிவு மட்டும் உள்ள மேற்கூறிய பாடசாலைகளில் ஆசிரிய / மாணவ விகிதாசாரம் முறையே 1:4, 1:3.7, 1:14 என மிகச் சிறந்த நிலையில் காணப்பட்ட போதிலும், புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் உயர்ந்த மட்டம் காணப்படவில்லை. புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் உயர்ந்த மட்டம் காணப்படவில்லை. புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வெட்டும் புள்ளியை விட அதிகமாக உள்ளது. 1.5 உம், 2.2 உம், மற்றும் 1.2 இற்கும் குறைவான வீதத்தினாலாகும்.

(iii) புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளைத் தாண்டாது மாணவர்களின் செயலாற்றல்யைப் பரீட்சிக்கையில் பண்டாரவளை, இரத்தினபுரி, ஹோமாகம, கல்வி வலயங்களில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் முறையே 2015 இல் 75 சதவீதம், 94 சதவீதம், 68 சதவீதம் 2016 ஆம் ஆண்டில் 75 சதவீதம், 92 சதவீதம், 68 சதவீதமும் 2017 ஆம் ஆண்டில் 71 சதவீதம் 68 சதவீதம் 76 சதவீதமும் 100 புள்ளிகளை அல்லது அதை விஞ்சாமை அவதானிக்கப்பட்டது.

**(இ) க.பொ.த (சாதாரண தரம்) பெறுபேறுகளின் வெற்றி**

பண்டாரவளை, இரத்தினபுரி, கல்வி வலயங்களில் மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைவான பாடசாலைகளில் க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் உயர்தரத்திற்குத் தகுதி பெற்ற மாணவர் எண்ணிக்கை 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 29 சதவீதம், 39 சதவீதம் மற்றும் 50 சதவீதம் ஆகும். இலங்கையில் தேர்ச்சி பெறும் சதவீதம் 75 ஆக உள்ளதுடன் ஊவா மாகாணம் 72 சதவீதமும் சப்ரகமுவ மாகாணம் 76 சதவீதமும் ஆகும்.

(ஈ) மாதிரி சோதனைக்குட்படுத்தப்பட்ட மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைந்த உயர்தரம் நடாத்தப்படும் பாடசாலைகளின் பரீட்சைப் பெறுபேறு கீழே காட்டப்பட்டுள்ளது.

| பாடசாலை | 2016 | | | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தேற்றிய எண்ணிக்கை | தேர்ச்சி பெற்ற எண்ணிக்கை | சதவீதம் % | தேற்றிய எண்ணிக்கை | தேர்ச்சி பெற்ற எண்ணிக்கை | சதவீதம் % | தேற்றிய எண்ணிக்கை | தேர்ச்சி பெற்ற எண்ணிக்கை | சதவீதம் % |
| மேமா/ஹோ/தீபன்கொடை ஸ்ரீ மேதானந்த வித்தியாலயம் | | | | | | | | | |
| கலை | 4 | - | 0 | 6 | 3 | 50 | 4 | 3 | 75 |
| வணிகம் | 2 | 1 | 50 | 2 | 2 | 100 | 2 | 0 | 0 |
| இர/வித்தியாதீப மகா வித்தியாலயம் | | | | | | | | | |
| கலை | - | - | - | - | - | - | 6 | 4 | 66.7 |
| இர/சித்தார்த்த மகா வித்தியாலயம் | | | | | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கலை | 4 | 2 | 50 | 2 | 1 | 50 | 3 | 2 | 66 |
| வணிகம் | 2 | 1 | 50 | 4 | 2 | 50 | - | - | - |
| விஞ்ஞானம் | 1 | 0 | 0 | - | - | - | - | - | - |

மாதிரி சோதனைக்குட்படுத்த்பட்ட 3 பாடசாலைகளில் உயர்தர கலை, வணிக, விஞ்ஞான பிரிவுகளில் கல்வி நடவடிக்கை இடம்பெற்று வருவதோடு 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் பரீட்சைக்குத் தோற்றிய ஆகக்கூடிய மாணவர் எண்ணிக்கை 6 ஆகும். பரீட்சையில் தேர்ச்சி பெற்ற ஆகக் குறைந்த செயலாற்றல் மட்டத்தினை இப்பாடசாலைகள் அண்மித்திருப்பினும் 2016, 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 2 மற்றும் 1 பாடசாலைகளின் ஒரு மாணவரேனும் ஆகக்குறைந்த செயலாற்றல் சாதனை மட்டத்தினை எட்டாதிருந்தது. அவ்வாறே இப்பாடசாலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 ஆண்டுகளில் எந்தவொரு மாணவரும் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்றிருக்கவில்லை.

### 3.3.3 முன்பள்ளி நடாத்துதல்

மாணவர் எண்ணிக்கை மிகக் குறைந்த பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக முன்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், பாடசாலை வளாகத்தினுள் பாடசாலை வகுப்பறைகளில் இம்முன்பள்ளிகள் நடாத்தப்பட்டு வந்துள்ளன. இந்த முன்பள்ளிகளில் பாடசாலை ஆசிரியர்களே கடமையாற்றும் சந்தர்ப்பமும் அவதானிக்கப்பட்டுள்ளது. தரம் 1 இற்கு மாணவர்களை அதிகரித்துக் கொள்வதற்காக இந்த முன்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் முன்பள்ளி மாணவர்கள் அதே பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவது உறுதிப்படுத்தப்படாததோடு பல மாணவர்கள் வேறு பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.





| பாடசாலை | முன்பள்ளி மாணவர் எண்ணிக்கை | | | தரம் 1 இற்கு அனுமதித்தல் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 | 2017 | 2018 | 2019 |
| பண்/கஞ்சேஅராவ வித்தியாலயம் | - | - | 05 | - | 01 | 08 |
| பொரகஸ்கமுவ மாதிரி இலக்கம் 01 கனிஷ்ட வித்தியாலயம் | 32 | 44 | 35 | 07 | 07 | 03 |

### 3.3.4 தொகுதி விடயங்களை கற்பிப்பதற்கான சந்தர்ப்பம்

**(அ) மாணவர்களை விருப்பத்திற்கேற்ப இடைநிலைப் பிரிவுகளில் தொகுதி பாடங்களைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் அற்றுப்போதல்**

இடைநிலைப் பிரிவுகளில் உள்ள மாணவர்கள் தமது விருப்பத்திற்கேற்ப பாடங்களைத் தெரிவு செய்கையில் இப்பாடசாலைகள் பலவற்றில் அப்பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் இல்லாமை, ஆசிரியர்கள் உள்ள பாடங்களை கற்கும் நிலை ஏற்பட்டுள்ள காரணத்தால் அம்மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்கு செல்லும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது. அவ்வாறே அத்தியாவசியமான விடயங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களும் இப்பாடசாலைகளில் இல்லாத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. இதற்கமைய, மாதிரி சோதனைக்குட்படுத்தப்பட்ட 10 பாடசாலைகளில் 13 பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாமை அவதானிக்கப்பட்டுள்ளது.

| பாடசாலை | பாடங்கள் |
|---|---|
| இர/யட்டவலை வித்தியாலயம் | கணிதம், விளையாட்டு |
| இர/உடுனோவா கனிஷ்ட வித்தியாலயம் | தொழில்நுட்பம், அழகியல் |
| இர/எல்லாவெல பரணகம வித்தியாலயம் | சிங்களம், பௌத்தம் |
| கலேகம கனிஷ்ட வித்தியாலயம் | விஞ்ஞானம், இரண்டாம் மொழி, |
| ஒதொட்ட ரன்தெனிய வித்தியாலயம் | சித்திரம், சங்கீதம், நாடகமும் அரங்கியலு |
| இஹலகம கனிஷ்ட வித்தியாலயம் | கணிதம் |
| இர/தர்மராஜ வித்தியாலயம் | உடற்கல்வி, தமிழ் |

| | |
|---|---|
| இர/கொஸ்பலஹின்ன வித்தியாலயம் | சிங்களம் |
| நிக/ரன்தெனியால கனிஷ்ட வித்தியாலய | சங்கீதம் |
| இர/கළுத்தம வித்தியாலயம் | விஞ்ஞானம் |

### (ஆ) ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் இல்லாமை

கீழ் காணும் பாடசாலைகளில் வகுப்புக்களுக்குப் போதியளவு ஆசிரியர்கள் பாடசாலைகளில் இல்லாத காரணத்தினால் 06 பாடசாலைகளில் 11 வகுப்புக்களின் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு ஆசிரியர்கள் இல்லாமை அவதானிக்கப்பட்டது.

| பாடசாலை | ஆசிரியர் இல்லாத தரங்கள் |
|---|---|
| இர/களுவாவவதன்னை வித்தியாலயம் | 2 |
| இர/களுககம வித்தியாலயம் | 5 |
| இஹலகம கனிஸ்ட வித்தியாலயம் | 5 |
| பண்/குமரதன்னை வித்தியாலயம் | 1,2,3,4,5 |
| இர/முகத்தெட்டுவாதன்னை வித்தியாலயம் | 3 |
| இர/ஹொலகந்த வித்தியாலயம் | 2,3 |

ஆரம்பப் பிரிவுகளின் சரியான முறையில் ஆசிரியர்கள் இல்லாமை மற்றும் ஆசிரியர்கள் எவ்வாறெனினும் இடமாற்றம் பெற்றுக்கொள்வதால் ஏற்படும் ஆசிரிய வெற்றிடங்கள் காரணமாக பாடசாலைக்கு மாணவர்களை அனுமதிப்பதற்குப் பெற்றோர் விரும்பாமையும் இங்கு அவதானிக்கப்பட்டது. மேற்கூறிய பாடசாலைகளில் ஒவ்வொரு தரங்களிலும் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாத சந்தர்ப்பங்களும், ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுக் கொள்வதால் வருடம் முழுவதும் ஆசிரிய வெற்றிம் நிலவும் சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

### 3.3.5 ஒரு மாணவரேனும் இல்லாத வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள்

2016, 2017 மற்றும் 2018 ஆகிய 03 ஆண்டுகளில் பண்டாரவளை, இரத்தினபுரி, மற்றும் நிக்கவரெட்டிய கல்வி வலயங்களில் முறையே 4,12,11 பாடசாலைகளில் மாணவர்கள் இல்லத வகுப்பறைகள் தொடர்பான விபரங்கள் இணைப்பு 09 இல் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய, இப்பாடசாலைகளில், 2018 ஆம் ஆண்டில் 37 வகுப்புக்களிலும், 2017

ஆம் ஆண்டில் 26 வகுப்புக்களிலும் 2016 ஆம் ஆண்டில் 26 வகுப்புக்களிலும் ஒரு மாணவரேனும் இல்லாததனால் குறித்த வகுப்பு பொறுப்பாசிரியர் வருடம் முழுவதும் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடாது வேதனம் பெற்றுக்கொண்டமை அவதானிக்கப்பட்டது.

### 3.3.6 ஆசிரிய மாணவ விகிதாசாரம்

இரத்தினபுரி, பண்டாரவளை, ஹோமாகம, கல்வி வலயங்களில் முறையே 15, 20, 03 பாடசாலைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி சோதனையில் அவ்வலயங்களில் ஆசிரிய மாணவ விகிதாசாரம் முறையே 1:3 - 1:14 மற்றும் 1:1 மற்றும் 1:12, 1:2 - 1:11 இடைப்பட்டதாகும். அவ்வாறே ஆசிரிய மாணவ விகிதாசார 1:10 ஐ விடக் குறைவான பாடசாலைகள் எண்ணிக்கை முறையே 12, 17, 2 ஆகும். இலங்கையில் சாதாரண பாடசாலைகளில் ஆசிரிய மாணவ விகிதாசாரம் 1:17 ஆனபோதும், மாதிரி சோதனைக்குட்படுத்தப்பட்ட மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைந்த பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படாததோடு மேலதிக ஆசிரியர்கள் இருந்தும் கற்பித்தல் பெறுபேறுகள் வெற்றிகரமாக இருக்கவில்லை.

### 3.3.7 சூழல் காரணங்கள்

அந்தந்த பிரதேசங்களின் விசேடமாக சூழலில் தாக்கம் புரியும் நிலை காரணமாக பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை குறைந்துள்ளது. உதாரணமாக மண்சரிவு அபாயமுள்ள பிரதேசம், வெள்ளப்பெருக்கிற்கு உட்படும் பாடசாலைகள், உமா ஓயா போன்ற விசேட செயற்திட்டம் காரணமாக பாடசாலைகள் அவதானத்திற்கு உட்படுதலும் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுமதித்தல் குறைய காரணமாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.

| **பாடசாலை** | **அவதானம்** | **மாணவர் எண்ணிக்கை** |
|---|---|---|
| ----------------- | ---------------- | ------------------ |
| இர/பஹலகம பௌத்த வித்தியாலயம் | வருடத்திற்கு 3 தடவை வெள்ளப்பெருக்கிற்கு உட்படுதல் | 92 |
| இர/முதுன்கொடுவை கிழக்கு வித்தியாலயம் | வெள்ளம் | 113 |

| | | |
|---|---|---|
| பண்/மகுள் வித்தியாலயம் | எல்ல | உமா ஓயா செயற்திட்டத்தின் 100 காரணமாக கட்டிடங்கள் சேதமடைதல் |

### 3.3.8 கல்விச்சார் பதவியணி

#### (அ) ஆசிரியர்களை மாற்றிக் கொள்ளல்

2016 சனவரி 07 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கைகளுக்கேற்ப பாடசாலையொன்றில் இருக்க வேண்டிய ஊழியர் குழு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச்சுற்றறிக்கைக்கு அமைய மாணவர் எண்ணிக்கை 200 இலும், குறைந்த பாடசாலைகளில் குறித்த ஊழியர் குழு இல்லாமையும் மேலதிகமாக உள்ள சந்தர்ப்பங்களும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் பற்றாக்குறை மற்றும் மேலதிகத்தை பாடசாலைகளுக்கிடையில் ஆசிரியர்களை மாற்றமடைவதனூடாக மாகாண மட்டத்தில் தீர்க்க கூடியதாக இருந்தும் அவ்வாறு செய்யப்படவில்லை.

#### (ஆ) மேலதிக மற்றும் பற்றாக்குறையான ஆசிரியர்கள்

(I) இரத்தினபுரி, பண்டாரவளை, ஹோமாகம கல்விப் பிரதேசங்கள் முறையே 6, 31, 4 பாடசாலைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி சோதனைகளின் படி ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர் எண்ணிக்கைக்கேற்ப இருக்க வேண்டிய கல்விசார் ஊழியர் குழு தொடர்பில் பரீட்சிக்கப்பட்டது. ஆரம்ப பிரிவுடன் கூடிய இரத்தினபுரி கல்வி வலயத்தில் 03 பாடசாலைகளும், பண்டாரவளையில் 06 பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குஜறயும் பண்டாரவளை கல்வி வலயத்தில் 19 பாடசாலைகளிலும் ஹோமகமக் கல்வி வலயத்தில் 04 பாடசாலைகளிலும் மேதிலகமாக ஆசிரியர் உள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

(II) மேலும் சுற்றறிக்கைக்கமைய இருக்க வேண்டிய ஊழியர் குழுவை விட அதிக ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகள் இங்கு கண்டு பிடிக்கப்பட்டதுடன், இம்மேலதிக ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடாததுடன் பல ஆசிரியர்கள் தமது சொந்த ஊர்களுக்கு உரிய ஆசிரியர்கள் என்பதும் பௌதீகச் சோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இம்மேலதிக ஆசிரியர்கள் ஆசிரியர்

பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கு குறித்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.3.9 மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைந்த பாடசாலைகளில் பௌதீக வளப் பாவனை

விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

#### (அ) நவீன பௌதீக வளங்களின் பற்றாக்குறை

பாடசாலைகளில் பௌதீக வளங்கள் உள்ளமை, பாடசாலையை அழகாக வைத்திருத்தல், இடவசதி உள்ளமையும், போதியளவு கட்டிட வசதிகள் உள்ளமை போன்றவற்றையே பெற்றோரினால் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுமதிக்கையில் கவனத்திற் கொள்ளப்படுகின்றன. புதிய பௌதீக வளங்களின் பற்றாக்குறை இப்பாடசாலைகளிலும் அவதானிக்கப்பட்டதுடன் அதுவே பாடசாலைகளில் மாணவர்கள் குறைவடையக் காரணமாக உள்ளது.

உதாரணமாக நூலகம், பிரிக்கப்பட்ட வகுப்பறைகள் விஞ்ஞான கூடம், கணனி வசதிகள் போன்றன காண்பிக்கப்படுகின்றன.

#### (ஆ) மாணவர் எண்ணிக்கை குறைவாகவுள்ள பாடசாலைகளில் இடப் பாவனை

மாணவர் எண்ணிக்கை குறைவாக இருப்பினும், பாடசாலைக்குரிய காணியின் அளவு பாரிய நிலப்பரப்பாக உள்ளதுடன், நிலம் குறைப்பயன்பாட்டுடன் உள்ளமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, மாதிரி சோதனைக்குட்படுத்தப்பட்ட 16 பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை 10 தொடக்கம் 144 வரையில் உள்ளதோடு அப்பாடசாலைகள் அமைந்துள்ள காணியின் அளவு அண்ணளவாக 02 தொடக்கம் 07 ஏக்கர் வரையான வீச்சில் உள்ளது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பாடசாலையின் பெயர் | மாணவர் எண்ணிக்கை | காணியின் அளவு ஏக்கர் | ரூட் | பேர்ச் |
|---|---|---|---|---|
| **பண்டாரவளை வலயம்** | | | | |
| பதுளுதென வித்தியாலயம் | 10 | 05 | | |
| மொரகட்டிய வித்தியாலயம் | 41 | 05 | | |
| இலுக்பெலஸ்ஸ வித்தியாலயம் | 14 | 04 | | |
| ஹொரதோரவ்வ ஸ்ரீ ஜினரதன வித்தியாலயம் | 33 | 05 | | |
| வே எலிய வித்தியாலயம் | 20 | 03 | | |
| குமரதன்னை வித்தியாலயம் | 22 | 03 | | |
| நில்வலா வித்தியாலயம் | 25 | 05 | 01 | 13 |
| மேற்கு முதுன்கொட்டுவ வித்தியாலயம் | 32 | 02 | - | - |
| நுகதன்ட பத்ராவதி வித்தியாலயம் | 24 | 02 | - | - |
| கடகாகம வித்தியாலயம் | 41 | 05 | - | - |
| ஸ்ரீ போதி வித்தியாலயம் | 31 | 02 | 02 | 29 |
| விக்கிரமகந்த வித்தியாலயம் | 08 | 02 | - | - |
| களதுவாவ வித்தியாலயம் | 18 | 02 | - | - |
| பலாதெனிய வித்தியாலயம் | 46 | 04 | 02 | 0.8 |
| ஹெலகந்த வித்தியாலயம் | 16 | 03 | - | - |
| மேமா/ஜய/ராஹுல மகா வித்தியாலயம் | 144 | 07 | | |






### 3.3.10 சிறையிலடைப்பட்ட மாணவர்களுக்கான பாடசாலை

---------------------------------------------------------------------------------

வடருக்க சுணித வித்தியாலயம் சிறையிலிடப்பட்ட இளைய குற்றவாளிகளுக்கென உருவாக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைந்த பாடசாலை என்பதுடன் அங்கு தரம் 9, 10, 11 மட்டுமே உள்ளது. அந்தத் தரங்களுக்கு உரிய வயதுடைய மாணவர்கள் அனுமதிக்கப்படாததுடன் வெவ்வேறு கல்வித் தரங்களுடைய 16 - 25 வயதுக்குட்பட்ட இளைய குற்றவாளிகள் இப்பாடசாலையில் அனுமதிக்கப்படுவர். சிறையிலிடப்பட்ட 51 மாணவர்கள் இங்கு கல்விகற்பதுடன் இது ஒரு விசேட பாடசாலையாகும். இப்பாடசாலைக்கான ஆசிரியர்களுக்கு ஒரு விசேட பயிற்சி அவசியமெனினும் அவ்வாறான விசேட பயிற்சி எதுவும் அளிக்கப்படாமலேயே கற்பித்தல் நடவடிக்கை இடம்பெறுவதாக, இலங்கையிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் கல்வி கற்கும் வயதில் உள்ள சகல குற்றவாளிகள் தொடர்பான தரவுகள் சிறைச்சாலையில் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு இப்பாடசாலையினூடாக கல்வியை வழங்குவதற்கு குறித்த பிரிவுகளைத் தெளிவுபடுத்தி தேவையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.11 மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைவதற்கான காரணம் தொடர்பில் அதிபர்களதும் ஆசிரியர்களதும் கருத்துக்கள்

200 மாணவர்களையும் விடக் குறைவான பாடசாலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீகச் சோதனையில் பாடசாலைகயில் மாணவர் எண்ணிக்கை குறைவடைவதற்கான காரணங்களை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடி தகவல் பெற்றுக் கொள்ளப்பட்டன. அது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களுக்கேற்ப போக்குவரத்து வசதிகள் காரணமாக பிள்ளைகளை நகரத்துப் பாடசாலைகளுக்கு அனுப்புதல், இப்பாடசாலைகளில் நவீன பௌதீக வளங்களின் அபிவிருத்தியின்மை, நகரத்திலுள்ள பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு எண்ணிக்கையை அதிகரித்தல், ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியர்கள் இடமாற்றமின்றி நீண்ட காலமாக இருப்பதால் மக்கள் அந்த ஆசிரியர்களை

ஒதுக்குதல், பரீட்சை பெறுபேறுகள் வெற்றிகரமாக இல்லாமை, இயற்கைச் சூழல் சிக்கல்கள் என்பன இவற்றுள்ளடங்கும்.

## 3.4 முதலாந் தரத்திற்கு மாணவர்களை அனுமதித்தல்

முதலாந் தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கையில் பாடசாலைகளின் பிரசித்தம் தொடர்பாகப் பெற்றோர் அதிக ஆர்வம் காட்டுவதோடு பாடசாலையின் அமைவிடம், பாடசாலையின் காரிய அதனையையும் கவனத்தில் எடுக்கப்படுகின்றது.

### 3.4.1 பாடசாலைகளை வகைப்படுத்தல்

#### (அ) ஆரம்பப் பிரிவை மட்டும் கொண்ட பாடசாலைகள்

2017 ஆம் ஆண்டில் முதலாந் தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை, பாடசாலை தொகுதிக்கேற்ப வகைப்படுத்தப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் முதலாந் தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட முழு மாணவர் எண்ணிக்கையில் 40 சதவீதம் ஆரம்பப் பிரிவு மட்டும் உள்ள பாடசாலைகளிலாகும்.

| பாடசாலை வகை | முதலாந் தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | **தேசிய பாடசாலை** | **மாகாணப் பாடசாலை** | **மொத்த பாடசாலை** | **சதவீதம்** |
| | | | | % |
| 1 ஏபீ | 25,583 | 27,702 | 47,285 | 14.7 |
| 1 சீ | 938 | 68,477 | 69,415 | 21.5 |
| 2 ஆம் வகை | 8 | 74,703 | 74,711 | 23.2 |
| 3 ஆம் வகை | 0 | 130,724 | 130,724 | 40.6 |
| மொத்தம் | **26,529** | **295,606** | **322,135** | |

மாதிரி சோதனைக்குட்படுத்தப்பட்ட ஆரம்பப் பிரிவை மட்டும் கொண்ட பாடசாலைகளில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முதலாந் தரத்திற்கு அனுமதிக்கப்பட்டதன் முன்னேற்றம் கடந்த 02 ஆண்டுகளில் 15 பாடசாலைகள் தொடர்பில் முதலாந்

தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 2 தொடக்கம் 17 வரையான வீச்சல் உள்ளது. அப்பாடசாலைகளில் முழு மாணவர் எண்ணிக்கை 06 தொடக்கம் 65 வரையான குறைந்த வீச்சினுள் காணப்படுகின்றது.

| **பாடசாலையின் பெயர்** | **மொத்த மாணவர் எண்ணிக்கை** | **முதலாந் தரத்திற்கு அனுமதித்தல்** | |
|---|---|---|---|
| | | **2017** | **2018** |
| பண்/வீரகோன் கம வித்தியாலயம் | 26 | 06 | 06 |
| பண்/பியரபன்தோவ வித்தியாலயம் | 65 | 07 | 11 |
| பண்/களுபஹன மகா வித்தியாலயம் | 29 | 05 | 03 |
| பண்/குமாரதன்னை வித்தியாலயம் | 10 | 03 | 03 |
| பண்/கொஸ்கம வித்தியாலயம் | 23 | 06 | 04 |
| பண்/ரன்வத்துகுஹாவ வித்தியாலயம் | 23 | 02 | 02 |
| பண்/ஆம்ஹோல் தமிழ் வித்தியாலயம் | 21 | 05 | 05 |
| பண்/கந்தேஆரவ ராஹுல வித்தியாலயம் | 22 | - | 02 |
| பண்/கோவுஸ்ஸ வித்தியாலயம் | 29 | 03 | 08 |
| பண்/அப்புத்தளை மேற்கு தமிழ் வித்தியாலயம் | 25 | 05 | 05 |
| மாலதொல வித்தியாலயம் | 06 | 01 | - |
| இர/பசுஹலகல பௌத்த வித்தியாலயம் | 48 | 06 | 17 |
| இர/மேற்கு முதுன்கொட்டுவ வித்தியாலயம் | 06 | - | - |
| நிக/தல்கமுவ ஆரம்ப பாடசாலை | 25 | 06 | 03 |
| நிக/மல்வான ஆரம்ப பாடசாலை | 35 | 09 | 06 |

மாணவர் எண்ணிக்கை குறைவான இவ்வாறான பாடசாலைகளில் முதலாந் தரத்திற்கு அனுமதித்தல் குறைவடைவதனால் அப்பாடசாலைகள் எதிர்காலத்தில் மூடப்படக்கூடிய அபாயத்திற்கு முகங்கொடுத்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

### 3.4.2 ஒரு மாணவரேனும் முதலாந் தரத்திற்கு அனுமதிக்கப்படாத பாடசாலைகள்

**(அ) பாடசாலைக்கு விண்ணப்பித்தல்**

மாணவர் எண்ணிக்கை 200 இலும் குறைந்த பாடசாலைகளில் 2019 ஆம் ஆண்டிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு 10 விண்ணப்பதாரர்களை விடக்குறைவாகக் கிடைக்கப்பெற்ற மாதிரி சோதனைக்குட்படுத்தப்பட்ட பண்டாரவளை மற்றும் இரத்தினபுரி வலயப் பாடசாலைகளில் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட வகையில் 200 மாணவர்களை விடக் குறைந்த 30 பாடசாலைகளில் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பப் பிரிவில் 608 மாணவர்கள் இருந்தபோதும் 2019 ஆம் ஆண்டில் முதலாந் தரத்திற்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 89 ஆகும். இதற்கமைய இப்பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை சீராகக் குறைந்து வந்துள்ளது.

**(ஆ) மாணவர்கள் அனுமதிக்கப்படாத பாடசாலைகளின் அதிகரிப்பு**

முதலாந் தரத்திற்கு ஒரு மாணவரேனும் அனுமதிக்கப்படாத பாடசாலைகளின் எண்ணிக்கை 2017, 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே 433 உம், 331 உம், 405 உம் என புள்ளிவிபர ஏடுகளின் அடிப்படையின் உறுதிப்படுத்தப்படுகின்றது.

## 3.5 பாடசாலைகளை எழுச்சிபெறச் செய்ய நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு செயற்திட்டங்கள்

### 3.5.1 2012 - 2016 வரையான காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்ட 1000 பாடசாலை செயற்திட்டங்கள்

பிள்ளைகளினை சிறந்த பாடசாலைகளுக்கு அனுமதித்துக் கொள்ளும் பெற்றோரின் எதிர்பார்ப்பை பூர்த்தியாக்கும் வண்ணம் உயரிய அபிவிருத்தி பெற்ற 1000 பாடசாலைகளை நாடு முழுவதும் உருவாக்கும் நோக்கில் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் பின்வருமாறு**

(i) ஆரம்பப் பாடசாலைகள் பலவற்றின் மூலம் ஊக்கப்படுத்தப்படும் இடைநிலைப் பாடசாலைகளினால் கல்வித்துறையை போதுமானளவு அமைப்புடன் மற்றும் தரமானதுமான அபிவிருத்தியை உண்டாக்குதல்.

(ii) அப்பாடசாலைக்கு அவசியமான பௌதீக மற்றும் மனித வளங்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் முழுமையான பாடசாலையாக உருவாக்குதல்

(iii) ஆரம்ப பாடசாலைகளுடன் இணைத்து அபிவிருத்தி வழிமுறைகளை அறிந்து கொள்வதும் திட்டமிடலும்.

(iv) அதிசிறந்த கல்வி மத்திய நிலையங்களாக அமைத்து மனிதாபிமான குணங்களுடனான மக்களை உருவாக்குதல்.

(v) நகர்ப்புற பிரசித்தி பெற்ற பாடசாலைகளுக்குள்ள மாணவர் பெருக்கைக் குறைத்தல்

(vi) நாட்டின் அனைத்து பிரதேசங்களுக்கும் கல்வியை சமனாக சாதாரண முறையில் வழங்குவதை உறுதிப்படுத்தல்

(vii) உயர்தர விஞ்ஞான, கணித, வணிக மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளில் கல்வி கற்கும் மாணவர் எண்ணிக்கையை அதிகரித்தல்.

(viii) அனைத்தும் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் குறைந்தது 03 1 AB பாடசாலையாவது நிர்மாணித்தல்.

(ix) விஞ்ஞான / கணித / தொழில்நுட்ப / வணிக / கலை / அழகியல் போன்ற துறைகளின் மூலம் உயர்ந்த அறிவுடன் கூடிய மாணவர்களைத் தொழிற்சந்தைக்கு அனுப்புதல்.

(x) தகவல் தொழில்நுட்பம் கல்வி மற்றும் மொழி அறிவு வளர்ச்சியை கிராம மட்டம் வரை விரிவுபடுத்தல்.

(xi) இடைநிலைப் பாடசாலையை ஈர்க்கும் கட்டிடத்தினை ஆரம்பப் பாடசாலைகளை உருவாக்குதல்.

2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்ட இச்செயற்திட்டத்தில் பின்வரும் பலவீனங்கள் மாதிரி சோதனைக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகள் தொடர்பில் காணப்பட்டன.

**(அ) அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு இணங்குதல்**

கல்வி அமைச்சினால் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கும் பல்வேறு சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. முறையான மேற்பார்வை இல்லாத காரணத்தினால் சில பாடசாலைகள் அச்சுற்றறிக்கைகளை மீறி செயற்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

கல்வி அமைச்சின் 2011 நவம்பர் 24 ஆந் திகதி 2011/32 ஆம் இலக்க சுற்றறிக்கைகளுக்கேற்ப ஆரம்ப பாடசாலை வலையமைப்பிற்காக இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத் திட்டம் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

(i) இலவசக் கல்வி மற்றும் கட்டாயக் கல்வியை உறுதிப்படுத்தும் வகையில் சகல பிள்ளைகளுக்கு சம மற்றும் உயர் மட்டத்திலான ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை வழங்குதல் மற்றும் உயர் மட்டத்தில் வளங்களைப் பயன்படுத்துதல்.

(ii) இடைநிலைக் கல்வி சந்தர்ப்பங்களுக்குரிய அனைத்து விடயங்களையும் கற்பிப்பதற்கான கல்விப் பிரவேச சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதலும் விரிவாக்கலும்

(iii) பொதுசன திறமை மற்றும் செயற்முறைக் கல்வித் திறமை வளர்ச்சியூடாக மாணவர்களின் கல்வி தரத்தினை உயர்த்துதல்.

(iv) இடைக்கால வேலைத்திட்டமாக ஊக்கமுள்ள ஆரம்ப பாடசாலை வலையமைப்பை முன்னேற்றுதல்.

(v) நகர்ப்புற பாடசாலைகளுக்குள்ள அவசிய மற்றும் போலியான போட்டிகளைக் குறைத்தல்.

இவ்வேலைத் திட்டம் பின்வரும் 03 கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தது.

(i) 2011 ஆம் ஆண்டு வரை 1-13 அல்லது 1-11 தரங்களுடனான பாடசாலைகளாக இருந்த (1ஏபீ/ 1சீ/2 ஆம் வகை) ஆயினும் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் ஆண்டுதோறும் 1 ஆந் தரத்திற்கு மாணவர்கள் சேர்க்கப்படாததால் கிரமமான முறையில் ஆரம்ப பிரிவு அகற்றப்பட்ட காரணத்தால் இடைநிலை பாடசாலையாக அமைக்கத் திட்டமிடப்பட்ட பாடசாலைகள்

(ii) ஆரம்ப பிரிவு இயங்காத 6 - 13 தரங்களைக் கொண்ட (1ஏபீ/1சீ) பாடசாலைகள்

(iii) 2011 ஆம் ஆண்டு வரை 1 - 11 அல்லது 1-13 தரங்களைக் கொண்ட பாடசாலைகளாக இயங்கிய (1ஏபீ/1சீ/2ஆம் வகை) ஆயினும் 2012 ஆம் ஆண்டிலேயே 1 - 5 வரையான ஆரம்பத் தரங்கள் அனைத்தையும் ஒரே தடவையில் அகற்றி வேறான ஆரம்பப் பாடசாலையாக மாகாண சபையின் கீழ் பதிவு செய்வதனூடாக இடைநிலைப் பாடசாலையாக்க திட்டமிடப்பட்டுள்ள பாடசாலைகள்

மேற்கூறிய 03 கட்டங்களின் கீழ் பாடசாலைகள் இயங்குவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த சில பாடசாலைகள் அந்த அறிவுறுத்தல் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டில் மட்டும் நடைமுறைப்படுத்தப்படாதிருந்தது. இந்தச் சுற்றறிக்கை மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. பாடசாலைகளில் ஆரம்ப பிரிவை வேறாகவும் இடைநிலைப் பிரிவுடன் கூடிய பாடசாலை வேறாகவும் அபிவிருத்தி செய்வதாக இருப்பினும் அப்பாடசாலைகள் குறித்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றாததாலும் முறையான மேற்பார்வைக்குட்படாததாலும் அந்த வேலைத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

(I) பௌதீக சோதனையில் அவதானிக்கப்பட்டவைக்கமைய முதலாந் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதை நிறுத்தி, மீண்டும் மாணவர்களை இணைத்துக் கொண்ட பாடசாலைக்கான உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பாடசாலை | இயங்கும் தரங்கள் | மூடப்பட்ட ஆண்டு | மீள ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| நிக/யூ.பீ வன்னிநாயக்க மத்திய மகா வித்தியாலயம் | 1 - 5 | 2013 | 2017 |
| நிக/ஹுலோகெதர ஆரம்ப பாடசாலை | 1 - 11 | 2013 | 2016 |
| நிக/பமுணுகம மகா வித்தியாலயம் | 1 - 11 | 2012 | 2016 |

(II) இடைநிலைப் பிரிவிற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வது நிறுத்தப்பட்டு எனினும் மீளவும் இடைநிலைப் பிரிவுக்கு மாணவர்களை இணைத்துக் கொண்ட 03 கல்வி வலயங்களின் 10 பாடசாலைகளின் தரம் 6 ஐ அகற்ற பல வருடங்களின் பின் மீளவும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பாடசாலை | 2018 மாணவர் எண்ணிக்கை | 6 ஆம் தரத்தை அகற்றிய ஆண்டு | மீளவும் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| **நிக்கவரட்டிய** | | | |
| நரம்மான வலகும்பா வித்தியாலயம் | - | 2013 | 2016 |
| தெம்பிலிபொல கனிஷ்ட வித்தியாலயம் | - | 2013 | 2016 |
| **ஹோமாகம** | | | |
| சியம்பலாகொடை தர்மபால வித்தியாலயம் | 201 | 2014 | 2016 |
| பெலகம சிரி பரகும் | 112 | 2014 | 2015 |

| | | | |
|---|---|---|---|
| வித்தியாலயம் | | | |
| ஒலபொதுவ சொய்சா மகா வித்தியாலயம் | 155 | 2012 | 2016 |

**ஹங்வெல**

----------------

| | | | |
|---|---|---|---|
| அகரவில மகா வித்தியாலயம் | 165 | 2013 | 2016 |
| மேமா/ஹோ/ஒலபொடுவ சொய்சா மகா வித்தியாலயம் | 155 | 2012 | 2016 |
| பண்/கொவுடல வித்தியாலயம் | 95 | 2013 | 2016 |
| பண்/தோவ வித்தியாலயம் | 176 | 2012 | 2017 |
| பண்/துல்கல்ல அசோக வித்தியாலயம் | 67 | 2012 | 2017 |


(III) அவ்வாறே சுற்றறிக்கைக்கேற்ப ஆரம்பப் பிரிவு / இடைநிலைப் பிரிவுகளை மூடிய பாடசாலைக்கான உதாரணம் கீழே தரப்பட்டுள்ளன.

| **பாடசாலை** | **பிரிவு** | **மூடப்பட்ட ஆண்டு** |
|---|---|---|
| பியரபத்தோவ வித்தியாலயம் | இடைநிலைப் பிரிவு | 2016 |
| இர/எரபொல ஸ்ரீ மகிந்த வித்தியாலயம் | ஆரம்ப பிரிவு | 2012 |
| மினு/வேலிய ஸ்ரீ சுஹதபால கனிஷ்ட வித்தியாலயம் | இடைநிலைப் பிரிவு | 2014 |

**(ஆ) கட்டிடங்கள் பயன்படுத்தப்படாமை**

உயர்தர தொழில்நுட்ப விடயங்களைக் கற்பிப்பதற்காக மகிந்தோதயா விஞ்ஞான கூடம் அமைக்கப்பட்டிருந்த போதும், அப்படங்கள் கற்பிக்கப்படாத பாடசாலைகளிலும் தொழில்நுட்ப விஞ்ஞானகூடம் அமைக்கப்பட்டுள்ளமை மாதிரி சோதனைக்குட்படுத்தப்பட்ட 200 மாணவர்களை விடக் குறைந்த பாடசாலையாகும். மாதிரி சோதனைக்குட்படுத்தப்பட்ட தீபங்கொடை

வித்தியாலயம் அவ்வாறான பாடசாலையான உள்ளதுடன் அந்த விஞ்ஞான கூடத்தை அமைக்கவும் அதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை செயலற்று இருப்பது அவதானிக்கப்பட்டது.





(இ) நகர்ப்புற பிரசித்தி பெற்ற பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் ஈர்க்கப்படுவதற்கு பரிகாரமாக ஹோமாகம வலயத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் மிகவும் வெற்றிகரமாக செயற்படுவது பௌதீக சோதனையில் அவதானிக்கப்பட்டது.

### 3.5.2 சிறந்த பாடசாலை அண்மித்த பாடசாலை செயற்திட்டம் (2016 - 2020)

#### (அ) அடிப்படைத் தரவுகள் மற்றும் செயற்படும் பாடசாலைகள்

பக்கச்சார்பானவர்கள் திருப்தியடையும் வகையில் வினைத்திறனானதும் உயர் தரத்திலான கல்வியை நவீனமாக்குவதும் புதுமையான நுழைவினூடாக சர்வதேச போக்குகளுக்கு பொருந்தும் வகையில் திறமையான பிரஜைகளை உருவாக்குதல் இந்த செயற்திட்டத்தின் சேவைகளாகும். இந்த செயற்திட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 64,930 மில்லியன் ஆகும். அதன் காலம் (2016 - 2020) ஆனதுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 31,234.77 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் கீழ் பிரேரிக்கப்பட்ட 14 செயற்பாடுகள் காணப்படுவதுடன் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்ட பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை 9.345 ஆகும்.

**(ஆ) அண்மிய பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டத்தின் கீழ் பிரேரிக்கப்பட்ட செயற்பாடுகள்**

| **விபரம்** | **பாடசாலை எண்ணிக்கை** |
|---|---|
| நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள் | 448 |
| ஆரம்பக் கல்விவள நிலையத்தை உருவாக்குதல் (தனிமாடி அல்லது இரட்டை மாடிக் கட்டிடம்) | 1021 |
| கனிஷ்ட இடைநிலை விஞ்ஞான கூடம் | 303 |
| அழகியல் பிரிவை அமைத்தல் (நிலைபேறான அபிவிருத்திக்காக மாணவர்களை உண்மையான பிரஜைகளாக உருவாக்கும் நோக்கில்) | 67 |
| சிறிய மற்றும் பாரியளவிலான புனரமைப்பு நடவடிக்கைகள் | 6497 |
| ஆசிரியர் விடுதி மற்றும் அதிபர் உத்தியோகபூர்வ இல்லம் - ஆசிரியர் | 366 |
| | 1401 |
| தொழில்நுட்ப கூடம் | 328 |
| தோட்டப்புற பாடசாலைகளின் அபிவிருத்தி | 720 |
| சிற்றுண்டிச்சாலைகளை அமைத்தல் - போசனைத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் | 163 |
| விளையாட்டு கட்டிடத் தொகுதி - உடல் நலத்துடனான பரம்பரைகளை உருவாக்குதல் | 64 |
| பற்சுகாதாரம் பிரிவு - வாய்ச் சுகாதார சிக்கல்களை தீர்த்தல் | 137 |
| சுகாதார வசதிகள் | 3892 |
| நீர் வசதிகளை வழங்குதல் - அடிப்படைத் தேவை என்பதனால் | 1145 |
| மின்சார வசதிகளை வழங்குதல் - நவீன | 3935 |

**(இ) தேவைப்பாட்டினை அறிந்து நிதி ஏற்பாடு செய்தல்**

இந்தச் செயற்திட்டத்தினால் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய பல்வேறு வேலைத்திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆயினும், பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒரு வலயத்திற்கு ஒரு செலவுக்காக நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஒவ்வொரு பாடசாலைகளினது தேவையினையும் சரிவர அறிந்து ஒரு வலயத்திற்கான பாடசாலைகளுக்கு ஒரே வளம் வழங்கப்பட்டிருந்தது. அதுவும் இருக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கையைக் கருத்திற் கொள்ளாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.

உதாரணம் - இரத்தினபுரி வலயப் பாடசாலைகளுக்கு - கழிவறை கட்டமைப்பிற்கு நிதி வழங்கப்பட்டிருந்தமை.

| பிரிவு | பாடசாலையின் பெயர் | மாணவர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|
| | | | ரூபா |
| இரத்தினபுரி 1 | தர்மராஜ வித்தியாலயம் | 133 | 78,609 |
| | கொஸ்பெலவின்ன வித்தியாலயம் | 67 | 933,735 |
| | ஹொட்பீல்ட் தமிழ் வித்தியாலயம் | 14 | 436,735 |
| | தமிழ் ஆரம்ப பாடசாலை | 189 | 797,590 |
| இரத்தினபுரி 2 | அத்தொட்ட வித்தியாலயம் | 47 | 933,735 |
| | அமுனுதென்ன கனிஷ்ட வித்தியாலயம் | 76 | 933,735 |
| | தெஹெனகந்த வித்தியாலயம் | 15 | 72,622 |
| | அமுனுதென்ன தழிழ் வித்தியாலயம் | 197 | 933,735 |
| எகலியகொடை | இத்தமல்கொடை சிரேஷ்ட வித்தியாலயம் | 82 | 299,096 |
| | சிரிசமன்புர வித்தியாலயம் | 55 | 717,831 |
| | நுகதன்ட பத்ராவதி வித்தியாலயம் | 23 | 726,222 |
| குருவிட்டை | மஹாவத்தகந்த வித்தியாலயம் | 74 | 797,362 |
| | பலாதெனிய வித்தியாலயம் | 47 | 933,735 |

| | | | |
|---|---|---|---|
| | லஸ்ஸகந்த ஜனபத ஜனத வித்தியாலயம் | 51 | 701,500 |
| | புஸ்லல்ல தமிழ் வித்தியாலயம் | 45 | 933,735 |
| பல்மடுல்ல | பேரலந்த வித்தியலாயம் | 68 | 726,222 |
| | பொத்தகந்த வித்தியாலயம் | 14 | 726,222 |
| | ஸ்ரீ போதி வித்தியாலயம் | 32 | 797,590 |
| | உருகுல வித்தியாலயம் | 14 | 933,735 |
| | ஸ்ரீ அனந்த வித்தியாலயம் | 92 | 797,590 |
| | பிரக்ஞாரத்ன வித்தியாலயம் | 54 | 797,590 |
| | ரில்ஹேன தமிழ் வித்தியாலயம் | 68 | 797,590 |
| | பாளுகம்பளை தமிழ் வித்தியாலயம் | 40 | 872,675 |
| | தெனவக்க தமிழ் வித்தியாலயம் | 34 | 933,735 |

(ஆ) மத்துகம கல்வி வலயத்திற்குட்பட்ட 73 பாடசாலைகளுக்கு குடிநீர் வசதிகளின் அதி தேவைப்பாடு இருந்தபோதும் இந்த செயற்திட்டத்தினூடாக இந்த தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. பரிந்துரைகள்

4.1 பாடசாலை அமைப்பு நடவடிக்கை தொடர்பான அறிவுறுத்தல் விதிக்கோவை, கல்வி நிர்வாகச் சான்றோரின் மேற்பார்வையின் கீழ் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல்.

4.2 பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுமதிக்கையில் பெற்றோரின் பாடசாலை தொடர்பாகவுள்ள எதிர்பார்ப்பு மாற்றமடையும் வகையில் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்.

4.3 பாடசாலை அமைப்பு தொடர்பான அறிவுறுத்தல் விதிக்கோவைக்கேற்ப பாடசாலைகளை ஆரம்பித்தல், மூடுதல் மற்றம் ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளல்.

4.4 பிரசித்திபெற்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை இடமாற்றம் செய்கையில் அந்த இடமாற்று உத்தரவு செயற்படுத்துபவரை மேற்பார்வை செய்தல்.

4.5 பாடசாலையொன்றின் பரீட்சைப் பெறுபேறு மாணவர்களை ஈர்த்துக் கொள்ளும் பிரதான மூலப் பிரமாணத்தால் இப்பாடசாலைகளில் பரீட்சைப் பெறுபேறுகளில் அதிகரிப்பை ஏற்படுத்த விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

4.6 அனைத்து பாடசாலைகளும் கல்வி நிர்வாக அறிக்கையொன்றைப் பேண வேண்டியதுடன் பல்வேறு செயற்திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்குகையில் அந்த அறிக்கையினை அடிப்படையாகக் கொள்ளுதல்.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி